உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—உசு.] விபவஹு சித்திரைமீ [பகுதி—சு.

Vol. XXVI. April-May-1928. No. 6.

கவியின்பம்.

[கஙூ—ம் பக்கத் தொடர்ச்சி.]

இனிக் கூதிர்க்காலவியல்பையும் யாம் அநுபவத்துணர்ந்தாற்போல உணருமாறு தங் கவிகளானே ஆசிரியர் உரைத்துக்காட்டல் மிக இன்பந்தருவதாம். கார்காலமென்பது மழைக்காலத்தையுணர்த்தலானே பிற்பெயலாகிய கூதிர்க்காலமும் அதனுளடங்கும். அதுபற்றி அக்கூதிர்க்கால இயல்பையும் ஆசிரியர் ஈண்டுணர்த்தினர். உணர்த்துங்கால் எங்ஙனமுணர்த்தினரெனின் அக்காலத்தோடியைபுபட்ட தம்மியல்பானே அக்காலவியல்பை யுணர்த்திநின்ற நிலத்தினை இயங்குதிணைப்பொருள்களானே உணர்த்தினர் என்க. அவர் உணர்த்திய வாறுவது:—

'இரவும் பகலும் இடைவிடாது மழைபெய்தலாற் பெருங்குளங்களும் நீர்நிறைந்தன; அந்நிறைவானே குளங்களில் திரைகள் நெருங்கிபெழுந்தன; உயர்ந்தமலைகள் குளிர்ச்சியடைந்தன; மழைநெருக்கினானே திசைகள் கட்புலப்படாவாயின; அகன்றிலும் (அகன்றில்—ஆணன்றில்) அன்றிலும் குளிர்மிகுதியானே தம்முடலன்றி உயிருமொன்றிக் குடம்பைகளினுறைந்தன; குயில்கள் தம்முடல் ஒடுங்கின; பிரிந்த மகளிர், குளிர்நீங்க உடலொன்றி உறைதற்குரிய தம் நாயகரைநினைந்து வருந்தினர்; குளிர்ச்சிபொருந்திய வாடைக்காற்றானது ஆசைபுரிவாராகிய அரம்பையர்மேலும் அவர்களுடைய அல்குற்றாசினைப்பற்றி அசைத்து வெம்மைதொடா ஊசல்போல வீசியது. கடலும் நிறைந்தது; சூரிய

கிரணங்களும் குளிர்ந்தன. நாழிகைவட்டிலாலறிவதன்றி இது பகல்,
இது இரவு என உதயாத்தமனங்களாற் காலம் அறிதல் கூடாவாயின;
கிளிகள் குளிர்பொறுக்கமுடியாமல் நெற்பொதிகளிலே அப்பொதி பிரியப்
புகுந்து மொய்த்திருந்தன; பரதவர்முற்றங்களிலுள்ள புன்னைகள் சினைக
டோறும் பூத்தன; யானைகள் தம்மீது பெரியமழைத்துளிகள்வீழ
இரவும் பகலும் நின்றநிலைபெயராமல் அசைவின்றிநின்றன; குளிர்ச்சி
யையடைந்த அன்னங்கள் மலைச்சாரல்கடோறும் அந்திக்காலத்திலே
வேதிகைகளிலுண்டாக்கிய அகிற்புகைபடும்படி சந்தனமரங்களின்
இலைகளையுடைய தழைகளுள் நுழைந்திருந்தன; வெளியிற்போக
முடியாமையினாலே பெண்குரங்குகள் முழைஞ்சுகளுட்படுத்துத்
துயின்றன; அவற்றின்பக்கத்தே ஆண்குரங்குகள் துயில்வாராமையி
னாலே அசைவின்றி முள்காந்திருந்தன; பெண்கள் சுனைகளிலும் அருவி
களிலும் ஆடாதிருந்தார்கள்; ஊசல்களும் வறிதாயின; புனங்களிலுள்ள
இதண்களும் வறிதாயின; பெண்குருகுகள் தாழைகளிலே அவற்றின்
வெள்ளியமடலையுடைய பூக்கள் தங்கிளைபோலப் பக்கத்திலே விளங்கத்
தஞ்சிறைகளை ஒடுக்கிக்கொண்டு அசையாதிருந்தன; நீர்வாழ்பறவைக
ளெல்லாம்கூடி யொலித்தன; வண்டுகள் பண்களைப் பாடின; மயில்கள்
கூத்தை ஆடின; மான்கள் மரவடிகளிலொதுங்கின; பக்கத்தில் அகிற்
புகையமைந்த சயனங்களிலேறி ஆடவர்களும் பெண்களும் ஒருவரை
யொருவர் இறுகத் தழுவிக்கொண்டு படுத்திருந்தார்கள்; வண்டுகள் மலர்
களிற் றுயிறலையொழிந்து வெப்பந்தரும் சந்தனமரங்களிலே தா
மூண்டாக்கிய துளைகளிலே மகிழ்ந்து துயின்றன; அன்னங்கள்
தாமரைமலர்களி லிருத்தலைவிட்டுச் செறிவையுடைய மரப்பொதும்
பர்களிலே மழைபடாதபடி இருந்தன; சிறுகுடில்களின்கண்ணே மரங்
களையடுக்கிச் செய்த பரண்களிலே எயினர்கள் எயிற்றியர்களோடு
துயின்றார்கள்; கொடிகள் பக்கத்தே சுற்றி உயர்ந்துள்ள சிறிய இலைகளை
யுடைய புளியமரங்கடோறும் கையிற்கொண்ட ஆட்டுக்குட்டிகளோடும்
ஏறி மழைபடாதபடி இடையர்கள் இருந்தார்கள்; ஆட்டுக்குட்டிகளைத்
தூக்கும்படி சுற்றித்திரிகின்ற கழுகுகள் அம்மரங்களின் ஒருபக்கத்திலே
பசிமேற்படப் பற்களைத்தின்றுகொண்டு கள்ளரைப்போல ஒளித்
திருந்தன; யானைகள் கற்பாறைகளில் நிற்கமுடியாமல் முழைகளுள்
நுழைந்தன,' என்பதே.

இனி இப்பொருள்களினியல்பை உவமைமுதலியவற்றின்வாயிலாகப் புனைந்துரைக்குங்கால், யானைகள் இரவும் பகலும் மழையில் நனைந்தபடியே நின்றநிலையிற் பெயராமலும் துயிலாமலும் அசையாமல் நின்றதற்கு, மழைக்காலத்தும் இரவும் பகலும் நின்றநிலையிற் பெயராமலும் துயிலாமலும் அசையாது நின்று தவம்புரியும் அந்தணர்நிலையை உவமையாக்கி,

> "நிறங்கருகுகக்குல்பகனின்றநிலையோ
> அறங்கருதுசிந்தைமுனியந்தணரினனிப்
> பிறங்கருநெடுந்துளிபடப்பெயர்வில்குன்றின்
> உறங்கலில்விலங்கலிலநின்றவுயர்வேழம்" (௭௪)

என்றும், பசிமிகுதியினும் குளிர்மிகுதியினும் தன்னுடலொடுங்கப் பெற்று மந்தியையும்விரும்பாது முன்காக்கிருந்த குரங்கினிருப்பிற்கு இந்திரியத்தையடக்கிய யோகியினிருப்பை உவமையாக்கி,

> "மந்திதுயிலுற்றமுழைவன்கடுவனங்கத்
> திந்தியமவித்ததனியோகியினிருந்த" (௭௫)

என்றும், சிறைகளையொடுக்கி உடம்பை அசையாமற் றுறைகளிலிருந்த குருகுகளுக்கு, உருவாலும் நிறத்தாலும் ஒப்புமையுடைய தாழைப் பூக்களையும், அவை பெயராதிருந்தமைக்குப் பிரிந்ததலைவியரின்கிடையையும் உவமையாக்கி,

> "கருந்தகையதண்சினையகைதைமடல்காதல்
> தருந்தகையபோதுகிளையிற்புடைதயங்கப்
> பெருந்தகைபொற்சிறையொடுக்கியுடல்பேரா
> திருந்தகுருகின்பெடைபிரிந்தவர்களென்ன" (௭௭)

என்றும், பெருமழையைக்கண்டவுடனே உண்டான பெருமகிழ்ச்சியாற் பலவாறு நடிக்கின்ற மயில்களுக்கு, பலவகைக்கூத்துக்களை ஆடுகின்ற மதங்கியரை உவமையாக்கி,

> "விதங்களினடித்திவிகற்பவழிமேவும்
> மதங்கியரையொத்தமயில்" (௭௮)

என்றும் கூறியசெய்யுட்கள் எத்துணையின்பந் தருகின்றன.

[இப்படலத்து அ௩-ம் செய்யுளுள் 'கழுது' என்னும் மூலபாடம் 'கழுகு' எனச் சில ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றது. கழுகுகளே ஆட்டுக்குட்டிகளைக் கவர்வனவாதலின் அதுவே பொருத்தமாம்.]

இன்னும், மக்கள் இக்காலத்திலே நாழிகைவட்டங்கொண்டு காலத்தையறிதல்போல, அக்காலத்தில் நாழிகைவட்டில்கொண்டு காலத்தையறியுமியல்பும், அவர்கள் மழைக்காலத்தே பக்கத்தே நெருப்பைமூட்டிக்கொண்டு உயர்ந்தகட்டில்களி லேறிப் படுத்திருக்குமியல்பும், வேடர்கள் மழைக்காலத்தே தஞ் சிறுகுடில்களினிடமாக ஒருபுறத்தே பாணமைத்து அதிலேறிப் படுக்குமியல்பும், பறவைகள் இலைகள் நெருங்கிய மாச்சினைகளின் குழைகளுள் மழைபடாதபடி நுழைந்திருக்குமியல்பும், ஆடுமேய்க்கும் இடையர்கள் மழைபடாதபடி புளியமரங்களிலேறியிருக்குமியல்பும், இதனுள்வருஞ் செய்யுள்களானே அறியக்கிடத்தலும் மிக மகிழ்வளிப்பதேயாம்.

இனிக் கூதிர்க்காலத்திறுதியிலே மழைப்பெயலொழிதலையும் தங் கவிகளானே நாம் கண்ணுற்காணுமாறு கூறுஞ் சித்திரம் மிகவும் இன்பளிக்கற்பாற்று. அதனையு மிங்கே காட்டுதும். அஃதாவது:—

மேகங்கள் வெளுத்தன; மேகங்களாலான இருள் கழிந்தது; மின்களெல்லாம் மறைந்தன; மலைப்பக்கமெல்லாம் நிறைந்த நீர்வெள்ள முழுதும் வற்றின; அம்மலைகளி னுச்சியினின்றும் அருவிகள்வீழ்ந்து பெருகின; ஆறுகள் நீர்வருவாய் குறையப்பெற்றன; கரியமேகங்கள் ஆகாயத்தைவிட்டுநீங்கலாலே சந்திரன் பொலிந்தது; வாடைக்காற்று மிக வீசிற்று; அன்னப்பறவைகளெல்லாம் நாற்றிசைகளிலும் வான்வழிப் பறந்துசென்றன; நதிமுதலியவற்றிலுள்ள நீரும் தெளிந்தது; நீர்களில் மீன்கள் பிறழ்ந்தன; தாமரைமலர்கள் பொலிவழிந்தன; செங்கிடைகள் மலர்ந்தன; தவளைகள் நாவடங்கின; மயில்கள் கூத்தொழிந்தன; ஆறுகள் நீர்குறையக் கடனீர் அவ்வாற்றின்வழி யெதிரேறின; திரைகளா லொதுக்கப்பட்டுக் கரைகளிலே முத்துக்கள் விளங்கின; கமுகின்காய்களெல்லாம் பழுத்தன; முதலைகள் வெயில்காய்தற்பொருட்டு வெளியேவந்து படுத்துறங்கின; கொடிகள் குழைத்துப் பொலிந்தன; நத்தைகளெல்லாஞ் சேற்றிலே அமிழ்ந்திக்கிடந்தன; நண்டுகள் வாயிலைச்

சேற்றாலடைத்துக்கொண்டு வளைகளிற்புகுந்து வெளிவாராதிருந்தன ; என்பதே.

இனி, இப்பொருள்களின் இயல்பை உவமைமுதலியவற்றின் வாயிலாகப் புனைந்துரைக்குங்கால், "உள்ளி உள்ளவெலாமுவந்தீயுமவ்-வள்ளியோரின் வழங்கி"ப் பின் வெளுத்த மேகத்திற்கு, உள்ளவெல்லாம் வழங்கியபின் ஈதற்குப் பொருளில்லையாக வெள்கி மேனிவெளுத்த வள்ளியோரை உவமையாக்கி,

"மள்கலில்பெருங்கொடைமருவிமண்ணுளோர்
உள்கியபொருளெலாமுதவியற்றபோ
தெள்கலிலிரவலர்க்கீவதின்மையால்
வெள்கியமாந்தரின் வெளுத்தமேகமே" (௧௦௩)

என்றும், இருளழிந்ததற்கு மெய்யுணர்ச்சிவர அழிந்த மாயையின் அழிவை உவமையாக்கி,

"ஆய்கினைமெய்யுணர்வணுகவாசறு
மாயையின்மாய்ந்தது மாரிப்பேரிருள்" (௧௦௪)

என்றும், முன் மழைதொடங்கும்போது தோன்றிய மின்முதலியவற்றைப் போர்தொடங்கியபோது தோன்றும் வாள்முதலியவாக உருவகித்துப் பின் ஈண்டும் மழைமுதலிய வொழிய வொழிந்த மின்முதலியவற்றிற்குப் போர் ஒழிய ஒழிந்த வாள்முதலியவற்றை அம்முறையே உவமையாக்கி,

"மூளமர்தொலைவுறமுரசவிந்தபோற்
கோளமைகொண்முகில்குமுறலோவின
நீளடுகணையெனத்துளியுநீங்கின
வாளுறையுற்றெனமறைந்தமின்னெலாம்" (௧௦௫)

என்றும், பக்கங்களிலே சூழ்ந்துநின்ற வெள்ளம் வற்ற அருவியோடு நின்றமலைகள் உடையொழிய உத்தரியத்தோடுநின்றதுபோலும் எனத் தற்குறிப்பாக்கி,

"தடுத்ததாணெடுந்தடங்கிரிகடாழ்வரை
அடுத்தநீரொழிந்தன அருவிதூங்கின

எடுத்தநூலுத்தரியத்தொடெய்திநின்
றுடுத்தவாநிறத்துகிலொழிந்தபோலுமே" (கo௬)

என்றும், மழையொழிதலாலே நீர்வருவாய் குறைந்து மெல்லமெல்ல வற்றும் ஆற்றிற்குப் புண்ணியம்போதலாலே பொருள்வருவாய் குறைந்து மெல்லமெல்லத் தேயும் நல்லொழுக்கமில்லாதவனுடையசெல்வத்தை உவமையாக்கி,

"மேகமாமலைகளின்புறத்துவீதலால்
மாகயாறியாவையும்வாரியற்றன
வாகையாற்றகவிழந்தழிவினன்பொருள்
போகவாறெழுகலான்செல்வம்போன்றவே" (கoஎ)

என்றும், மறைத்துநின்ற மேகங்கள் நீங்குதலினாலே பொலிந்துதோன்றிய சந்திரனுக்கு உருவுதிரையைத் திறந்து உருவுதலினாலே பொலியும் நடனமகளின்முகத்தை உவமையாக்கி,

"கடந்திறந்தெழுகளிறனையகார்முகில்
இடந்திறந்தேகலிற்பொலிந்ததிங்களும்
நடந்திறனவில்வுறுநங்கைமார்முகம்
படந்திறந்துருவலிற்பொலியும்பான்மைபோல்" (கo௮)

என்றும், தமக் கின்பமளிக்குங் கார்காலத்தைப் பிரிந்தமையினாற் களிப்பற்றுத் தஞ் சிறைகளை யொடுக்கினவாயும், நெஞ்சிற் கொண்ட துன்பத்தை யுடையனவாயும், விரும்பிய பயனொன்றில்லாதனவாயும் அச்சத்தையடைந்த மயில்களுக்கு இராமபிரானைப் பிரிதலினாலே களிப்பற்றுத் தன்னுடம்பை வாட்டினவளாயும் மனத்திற்கொண்ட துன்பமுடையவளாயும் விரும்பியபயனொன்றில்லாதவளாயும் எண்ணத்தான் மிக்கவளாயும் அச்சமுற்ற சீதையை உவமையாக்கி,

"தஞ்சிறையொடுக்கினதழுவுமின்னல
நெஞ்சுறுபயனிலநினைப்புநீண்டன
மஞ்சுறுநெடுமழைபிரிந்தமாமயில்
அஞ்சினமிதிலைநாட்டன்னமென்னவே" (ககக)

என்றும், தெளிந்த புதுப்புனலுக்கு மாதவர்மனத்தையும், அப்புனலின் கட் பிறழும் மீன்களுக்குப் பெண்களின் கண்களையும் உவமையாக்கி,

"வஞ்சனைத்தீவினைமறந்தமாதவர்
நெஞ்செனத்தெளிந்தனநீரநீர்தொறும்
பஞ்செனச்சிவக்குமென்பாதப்பேதையர்
அஞ்சனக்கண்ணெனப்பிறழ்ந்தவாடன்மீன்" (௧௧௨)

என்றும், ஒளிகுன்றி முதிர்ந்த தாமரைமலர்களுக்கு ஊடலால் ஒளி குன்றிய முகங்களையும், விரிந்தசெங்கிடைப்பூவிற்குக் கூடினவரிதழையும் உவமையாக்கி,

"வாடியமடந்தையர்வதனமொத்தன
தாடொாகமலர்ந்தனமுதிர்ந்ததாமரை
கூடினர்துவரிதழ்க்கோலங்கொண்டன
சேடுறுநகைமுகைவிரிந்த செங்கிடை" (௧௧௩)

என்றும், பலவிதமாகஒலிக்கின்ற தவளைகளுக்குக் கணக்காயர் ஓதுவிக்கும் ஒலியெழுத்துக்களைப் பலவிதமாக ஓதுகின்ற சிறுவர்களையும், அவை ஒலிதணிந்தமைக்குச் சொல்லுமிடத்தன்றி யொன்றையுமுரையாத நல்லறிஞர்நாவையும் உவமையாக்கி,

"கல்வியிற்றிகழ்கணக்காயர்கம்பலைப்
பல்விதச்சிறாரெனப்பகர்வபல்லரி
செல்விடத்தன்றியொன்றுரைத்தல்செய்கலா
நல்லறிவாளரினவிந்தநாவெலாம்" (௧௧௪)

என்றும், தன்னொடு சங்கமித்ததும் பெருக்குக்குறைந்ததுமாகிய ஆற்றினீரைத் திரைக்கையாற்றள்ளிக்கொண்டு எதிரேறிச்செல்லும் கடனீரைப் புணர்தற்குத் துகிலைத் திரைத்துச்சென்று அணைகின்றதுபோன்றிருந்தது என்றும், கரையிலொதுங்கும் முத்துக்களைத் தன்நாயகன் அணைகின்றகாலத்து அவ்வாறாகிய நங்கை நகைத்ததுபோன்றிருந்தது என்றும், தற்குறிப்பாக்கி,

"செறிபுனற்பூந்துகிற்றிரைக்கையாற்றிரைத்
துறந்துணைக்கான்மடுத்தொத்தவோதநீர்
எறூழ்வலிக்கணவனையெய்தியாறெலாம்
முறுவலிக்கின்றனபோன்றமுத்தெலாம்" (௧௧௫)

என்றும், வளைகளை அடைத்துக்கொண்டு வெளிவாதிருந்த நண்டுகளுக்குக் கதவுகளை அடைத்துக்கொண்டு வெளிவாதிருக்கும் லோபிகளை உவமையாக்கி,

“மழைபடப்பொதுளியமருதத்தாமரை
தழைபடப்பேரிலைப்புரையிற்றங்குவ
விழைபடப்பெடையொடுமெள்ளநள்ளிகள்
புழையடைத்தொடுங்கினவச்சைமக்கள்போல்” (௧௨௦)

என்றும், கூறியசெய்யுட்கள் எத்துணையின்பமளிக்கின்றன.

[மேற்காட்டிய ௧௦௭-ம் செய்யுளுள் “தகவிழந் தரியநன்பொருள், போகவாறொழுகலான் செல்வம்போன்றவே” என்பதற்கு, தன்தகைமை நீங்க அரிய நல்ல பொருள் போகும்படி நல்வழியிலொழுகாதவனுடைய செல்வங்குறைந்ததைப்போன்றன எனப் பொருள்கூறி ஆற்றுநீர் குறைந்தமைக்குமாத்திரம் அதனை உவமையாக்கியும், ௧௧௪-ம் செய்யுளிற் “கணக்காயர்கம்பலைப் பல்விதச்சிறாரென” என்பதற்குக் கணக்காயரும் சிறாருமெனவும் பொருள்கொள்ளுவாருமுளர். கணக்காயர் நெடுங்கணக்குப் படிப்பித்து மூலபாடமோதுவிப்பவர். “கற்றதூஉமின்றிக் கணக்காயர்பாடத்தால்” என்றார் பிறரும். இங்ஙனங்கொள்பவர் ஒரு நீர்நிலையில் முதற்கத்துந் தவளைக்கு முதற்சொல்லுங் கணக்காயனையும், பின்கத்துந்தவளைகளுக்கு அக்கணக்காயன் சொன்னதைச் சொல்லுஞ் சிறாரையும் உவமையாகக்கொள்வர்.

௧௦௮-ம் செய்யுளுள்வரும் ‘படம்’ என்பதற்குத் திரைப்புடவையென்றும், ௧௧௧-ம் செய்யுளில் ‘நெஞ்சுறுபயனில’ என்பதற்கு விரும்பிய பயனில்லாதன எனவே ஒருபொருளின் அனுபவத்தையும் விரும்பாதனவென்றும் பொருள்கொள்க. எழினி—ஒருமுகஎழினி முதலியன. (சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை ௧௦௯, ௧௧௦-ம் அடி பார்க்க.)]

(தொடரும்.)

சி. கணேசையர்.

ஸ்ரீ:

குருபரம்பரை.

எம்பெருமானார்வைபவம்.

[௧௯௮-ம் பக்கத்தொடர்ச்சி.]

ஆசிலாப்பெரியநம்பிமுதலாயவன்பர்களுந்
தேசுபொலிதிருவரங்கநகரணைந்துசிலகாலம்
ஈசனருளால்வாழ்ந்தாரங்நாளிலெழிற்காஞ்சி
மாசிலாத்திருநகரின்மன்னுமருளாளர்க்கு. (௮௪)

அன்பனுந்திருக்கச்சிநம்பியெனுமருணமத்
தின்புறுசொல்லுடையவனாயார்க்குமரிதாந்தவத்தை
முன்பியற்றிப்பிறந்தவனாய்மூவுலகுக்கோராணி
யென்பவனாய்நயிச்சியங்கள்யாவைக்குமிருப்பிடமாய். (௮௫)

வேறு.

பொய்ச்சார்வில்லாநிலையோனாய்ப்பூமிமேலீந்தரசொர்க்கம்
மெய்ச்சாங்கேத்துங்குணத்தினனாய்வேதநாதன்றன்னுடைய
அர்ச்சாவவதாரந்தன்னையவதாரம்போலாக்குதற்கு
நற்சார்வுடையநிலையோனாய்ஞானனந்தலத்தினனாய். (௮௬)

திருவைப்பொருந்துந்திருமார்பன்றன்னைச்சிந்தையுள்வைத்து
மருவப்பட்டமனத்தினனாய்வாக்குமனமுஞ்செயற்கையுந்தான்
கருவிற்புக்கநாண்முதலாய்க்கண்ணற்காக்குங்கருத்தினனாய்
ஒருவனுளன்பேருளாளருடனேமன்னியிரவுபகல். (௮௭)

வேறு.

வேலைவட்டஞ்சூழ்ந்தபுவிமெல்லியலாள்மலர்டர்ந்தை
நீலவட்டவிழிநீளையுடனெடுமாலருணோக்கி
ஆலவட்டம்பரிமாறியவரோடுமுரையாடிச்
சோலைவட்டக்காஞ்சிமாநகர்துதிப்பத்தொழுதமர்வான். (௮௮)

வேறு.

ஆங்கவன்றன்னைப்பற்றியல்லுநன்பகலும்பேணிப்
பூங்கழலிறைஞ்சிப்பூதூர்ப்புண்ணியக்கொழுந்தென்ன

வோங்குசீரிளையாழ்வாருஞ்சிலபகலொழுகிவாழ்ந்து
பாங்குடனொருநாளந்தப்பத்தனைநோக்கிச்சொல்வார். (௮௯)

இன்றெனக்கிரங்கிநீயேயின்னருள்புரியவேண்டும்
ஒன்றியகருணைவல்லாயெனவவருரைப்பக்கேட்டு
நன்றிசேர்கச்சிநம்பிநவையில்சீர்ப்பூதூர்வந்த
மன்றல்சேர்கமலத்தாராய்மாசினாற்குலத்துமேலாம். (௯0)

ஐயபிரமவைதிகத்திலாசிலாதநிட்டையையுன்
மெய்யிலுடையையத்திறத்தாலதுநீசெய்யவிரும்பிடினும்
வையமடாதுவைதிகர்க்குமற்றத்தொழிலென்றுரைக்குமெனாற்
செய்யுங்கருமமன்றிதுநீசெப்பவேண்டாமெனச்செப்பி. (௯௧)

போனானன்றுதிருக்கச்சிநம்பியதற்பின்பூதூர்வாழ்
தேனார்கமலத்திருத்தாரான்சிலநாளவன்பின்சென்றவனோ
டானாதமர்ந்தானதிலொருநாளருளாளர்க்குச்சிலநினைவு
தானாய்நினைத்துத்திருக்கச்சிநம்பிக்கதனைச்சாற்றுவான். (௯௨)

நம்பிசிலசொன்னினைந்தனனான்ஞானமிக்காயுன்னுடைய
தம்பிரானோடவைகேட்டுசாற்றவேண்டுமடியேற்கா
யெம்பிரானீயெனச்செப்பியிளையாழ்வார்போய்த்தெண்டனிட
உம்பர்புகழுந்திருக்கச்சிநம்பிநன்றென்றுவந்தேகி. (௯௩)

வேறு.

பேரருளாளர்முன்புபேணியெப்போதும்போலே
சீரருளெய்திநின்றுதிருவாலவட்டந்தாங்கி
ஆரருளோடுஞ்சேவித்தமர்ந்தனரவரைநோக்கிப்
பாரருட்பன்றியாகியிடந்தவர்பகரலுற்றார். (௯௪)

மன்னுசீர்க்கச்சிநம்பிவதனமுமனமுங்கண்டால்
என்னிடையொன்றுகேட்பானெழும்பியநினைவுபோன்ற
துன்னுடைக்குறியிலென்னவோதநீர்வண்ணர்கூறப்
புன்னரும்புகழ்சேர்நம்பிபுரிந்திவைபகரலுற்றான். (௯௫)

வேறு.

அக்கும்புலியினதளுமுடையானார்துயரமறுத்தவனே
ஒக்குந்துய்த்தபைக்குறையிலுடையானறியாச்சரக்குளதோ
தக்கபூதூரிளையாழ்வார்தமியேன்சில......நினைக்கின்றேன்
தொக்கபுகழாய்திருமாலைக்கேட்டின்றென்பாற்சொல்லென்றான். (௯௬)

அதுவேசொல்லவுன்னியதுமடியேனென்றானுசில்லான்
மதுவார்துளபத்திருத்தாரான்மற்றநம்பிமுகநோக்கி
முதுவேதத்தின்முடிவுணர்ந்தமுதல்வாபூதூரிளையாழ்வான்
இதுவேநினைந்தானதுகேட்டியென்னப்பின்னுமிசைக்கின்றான். (கூஎ)

செப்புமந்தவிளையாழ்வான்சேடத்துவத்தினுடன்பிறந்தான்
ஒப்பிலாதசிந்தையினுலெனையேபரமென்றுணர்ந்திருப்பான்
தப்பிலாதநாமுன்புசாந்தீபினியாமுனிபக்கல்
அப்பவோதியிடும்படிபோற்சகலகலையுமவரவர்பால். (கூஅ)

ஓதிப்பூதமைந்திடமாமுடம்புமுயிருந்தத்துவமும்
பேதப்படுத்தித்தன்னுள்ளேயெல்லாமறிந்துபிணக்கற்ற
மாதக்கோனுயிருந்துநமைக்கேட்டான்மனத்தினினைவுதனைப்
போதமிக்காயுரைக்கின்றேன்கேட்டின்றவற்குப்புகலுதியால். (கூகூ)

செப்புகின்றபரத்துவமும்யாமேயென்னச்செப்புதிவே
ஒருப்பிலாதாய்தெரிசனமும்வேதமென்றேயுரைத்திடுக
தப்பிலாதவுபாயமதும்பிரபத்தியென்றேசாற்றிடுக
அப்பபுகல்கவிவையன்றிநினைவும்வேண்டாமந்தியத்தில். (க00)

இந்தச்சரீரவவசானந்தன்னிலிசையுமோக்கமும்
அந்தமில்லாக்குணத்தினனுக்காசாரியனும்பெரியநம்பி
சிந்தையுள்ளேயிவையெல்லாந்தெளிந்துநோக்கியிளையாழ்வான்
முந்தநினைந்தானிவையிவையேமொழிந்துவருகபோயென்றான். (க0க)

என்றுமாயனருள்செய்யவின்பதுன்பமிரண்டுமற
நின்றநம்பிநெடுமாலைநெகிழ்ந்தவன்பால்விழுந்திறைஞ்சிச்
சென்றுபூதூரிளையாழ்வார்சேருந்தலத்திலணைந்திடலும்
மன்றல்கமழுஞ்செழுங்கமலமாலைமார்பன்வணங்கினான். (க0உ)

வேறு.

நம்பியுமந்தமறையவன்கழலினவையறவணங்கிநின்னினைவை
அம்புயக்கண்ணனருளினனிதுவோநினைந்தமையாசிலாயென்ன
எம்பிரானுரைத்தபடியெலாமுரைப்பவிலங்குசீர்த்தயாதாமன்
றம்பியாய்ப்பிறந்தானெக்குமென்றிறைஞ்சித்தாமரைக்கண்ணனீயென்ன ()

திருந்தியகருணைநம்பியைவியப்பத்திருக்கச்சிநம்பியும்பூதூர்ப்
பொருந்துசீர்மறையோனுள்ளமுமாயன்பொருவறுந்திருவுளக்கருத்தும்
இருந்தமைநோக்கிச்சிந்தையுட்களித்திங்கிவனுமோர்திருவவதாரம்
அருந்தவமுலகஞ்செய்ததன்பொருட்டாலவதரித்தனனெனவகத்துள். ()

உன்னியீண்டிருத்தியொப்பிலாயென்னவோதநீர்வண்ணனரிடத்தின்
மன்னினன்முன்போற்றிருக்கச்சிநம்பிமாசறுசீபெரும்பூதூ
ரென்னுநன்னகரிற்றிருவவதரித்தாரெண்ணுவாரீங்கிவன்சேடந்
தன்னைநாமருந்தியாருயிரதனைத்தரைமிசைப்பவித்திரமாக்கி. (௧0௫)

பின்புமாலருளு ்பெரியநம்பியைப்போய்ப்பேணுதலியல்பெனநினைந்தங்
கன்பினுலோங்குந்திருக்கச்சிநம்பியடியிணைநாடொறும்வணங்கி
யென்பெலாமுருகப்பின்செல்வார்பூதூரெம்பிரான்றிருக்கச்சிநம்பி
துன்பிலாநிலையாயடியனேன்செய்யும்பணியைநீசொல்லெனத்துதித்தான்.

வடிவினற்குணத்தாலொப்பிலாப்பூதூர்வள்ளலுநம்பியைநோக்கி
முடிவிலாப்பத்திவாரிதியனையாய்மூங்கரின்மூங்கனுய்க்கழியும்
அடியனேனகத்திற்பொன்னடிசாத்தியொருபகலமுதுசெய்தருளில்
விடியுமென்மாயாகங்குலென்றிசைத்தான்விளங்குசீர்நம்பியும்விளம்பும். ()

வேறு.

உன்னுடைத்தளிகைச்சேடத்தோரவிழருந்தப்பெற்றால்
என்னுடைச்சென்மமென்னைச்சார்ந்தவரெலையில்தீமை
மன்னுடையிராமன்செய்யமலரடித்துகள்சார்கல்வின்
றன்னுடைமேன்மையன்றோதமியனேற்கெய்தப்பெற்றால். (௧0௮)

என்றதற்கிசைந்துநம்பியியம்பிடவிளையாழ்வாரு
மன்றவையின்றுவேண்டுநம்பிநீவருதியென்னச்
சென்றனரகத்துத்தாந்தந்தேவியார்தம்மைக்கூவி
யின்றுநான்விருந்துநம்பிக்கிடும்படியிசைந்துபோந்தேன். (௧0௯)

நறுமலர்க்குழலினளேநாரணனுருவாமந்த
மறுவறுகுணத்தினனைமானிடனெனவெண்ணுதே
யறுவகைச்சுவையினன்குவிதத்தினிலன்பாற்பேணி
யுறுகறியமுதமிக்கபோனகமுண்டாக்கென்ன. (௧௧0)

வேறு.

செப்பிநம்பிவரும்வழியைநோக்கியிருந்தான்செழுமறையோன்
ஒப்பிலாததிருக்கச்சிநம்பியோதவண்ணரிடைத்
தப்பொன்றின்றித்தமக்கடுத்ததொழில்செய்தாங்கேதானமா
அப்பன்கச்சியருளாளனவரைநோக்கியறைகின்றான். (௧௧௧)

வருந்தும்பிறவித்துயர்கடிந்தமைந்தாவிப்போதோரகத்தில்
விருந்துண்பான்போகின்றவின்போலிருந்ததுன்றன்மெய்க்குறிகள்
திருந்தவுரையதியாவரிடையென்றுகூறத்திருமாலே
பொருந்துமன்பினிளையாழ்வார்பணித்தாரொப்பிப்போந்தனனால். (௧௧௨)

என்றுநம்பிதொழுதுரைப்பவீரேழுலகுமுண்டுமிழ்ந்து
நின்றமாயன்கட்டுரைப்பானீயின்றவன்றன்சேடத்துக்
கின்றுவிரும்பியொப்பிலையவ்விளையாழ்வானுநின்கலத்தில்
நன்றிசேருமுச்சிட்டநயந்துகொள்ளநினைக்கின்றான். (௧௧௩)

வேறு.

மருவருங்குணத்தினானேமற்றவனென்னைத்தாங்குந்
திருவநந்தாழ்வானாகுந்தெசரதன்மகனாய்நான்முன்
பொருவருமயோத்திதன்னிற்போந்தநாளெம்பிமாரா
மிருவரோடொருவனான இலக்குவனிளையாழ்வாராய். (௧௧௪)

மன்னினானவனின்சேடம்வாய்க்கொளல்பழுதம்மேலோன்
பொன்னடிவருந்தவிங்கேபோதுவானின்னைத்தேடிப்
பன்னருங்குணத்தாய்வேறோர்நெறியினிற்பரிவாலேகி
அன்னமென்னடையாண்மற்றவந்தணன்றேவிதன்னை. (௧௧௫)

வேறு.

அன்பினால்வணங்கியடிசில்கேட்டருந்தியாங்கவன்றிரும்புமுனீயும்
நின்பசிதணித்துவிரைவினில்வருதியென்றிறைநின்றருள்புரிய
என்பெலாமுருகிக்கண்கணீர்கலுழமாயவனிணையடியிறைஞ்சிப்
புன்புலன்கடிந்தசீபெரும்பூதூர்ப்புண்ணியன்வருநெறியன்றி. (௧௧௬)

மற்றொருநெறியிலேகினனம்பியாண்டையின்மறையவன்றேவி
யுற்றசீர்விருந்துசமைந்ததென்றுரைப்பவுலகெலாந்திருத்துதற்குதித்தான்
நற்றவமுடையநம்பியைக்கொணர்வனானெனவெழுந்துளவஞ்ச
மற்றவனமரும்பேரருளாவாருகிலென்றுங்கெழுந்தருளி. (௧௧௭)

தேடினாரெங்கேநம்பியென்றவருஞ்செங்கண்மால்கோயிலுளெங்கும்
நாடினார்காணார்திரும்புமுன்போனநம்பியுமவர்மனைநோக்கி
யோடினார்வாசற்புறத்தினிற்செறித்தாங்குள்ளமரோவியமனையாள்
தாடொழுதன்னேவருந்தினேன்பசியாலெங்குளார்தலைவரென்றிசைத்தார்.

அத்திறங்கேட்டவருந்ததியனையாளாக்கியவிருந்தினையருந்த
மெய்த்திறமுடையீரும்மையேநாடிவேதியர்தலைவனார்போனார்
பொய்த்திறமில்லாரிக்கணம்வருவரென்றனள்புண்ணியம்போல்வாள்
சித்திரநெறிசேர்கச்சிநம்பியுமச்சேயிழையாளொடுஞ்செப்பும். (௧௧௯)

அன்னையேயனையாய்பசியினாலடியேனாருயிர்வாடினேன்மிகவும்
பின்னையென்னாதேயிக்கணத்துதவப்பெற்றதேயமையுமென்றுரைப்ப

மின்னையேயனையாள் தளிகைசேர்த்தன்பின்வேண்டியபோனகமளித்தாள்
தன்னையேயனையர்ன்விரைவினிலருந்தித்தளிகையுமாற்றியத்தலமும். ()

வேறு.

விரைவினிற்சுத்திபண்ணிவிண்டுவின்கோயில்புக்கான்
புரையிலாமனத்தான்வந்துபோனகஞ்செய்துபோன
தரைமிசைப்பின்னுந்தானுஞ்சாணநீர்தெளித்தாள்தையல்
நிரையுறுதிவலைமேலேதெறிப்பவந்நிலையிலேகி. (௧௨௧)

தடம்புனலாடிமீண்டுதையலுமகத்தில்வந்தாள்
திடம்படுபூதூர்வள்ளல்திருக்கச்சிநம்பிதன்னை
நடந்துறத்தேடிக்காணாதக்கணம்மனையில்நண்ணி
மடந்தையோடிங்கேநம்பிவந்தனன்கொல்லோவென்ன. (௧௨௨)

அன்னமென்னடையாள்செப்பவரும்பசியுடையராகி
யென்னுடனடிசில்கேட்டாரீந்தனனருந்தியாங்கே
மன்னியதளிகையோர்கைமற்றொருகையாற்சுத்தி
பின்னுறச்செய்துபோனானென்றனர்பிரமனொத்தான். (௧௨௩)

கேட்டதிலுள்ளஞ்சோர்ந்துகெடுத்தனை தளிகையெங்கே
போட்டனன்கொல்லோவென்னப்புறமுமுள்ளிடமுமிக்க
தோட்டமுந்துறவுநாடிக்கண்டிலர்சுருதிவல்லார்
வாட்டமுற்றகத்துளெய்திமனைவியைவெறுத்துநோக்கி. (௧௨௪)

விருந்தவாருந்திப்போனபின்புநீவிரைவினேகிப்
பொருந்துநீராடியிங்கேபுக்ககாரணமென்னென்றார்
அருந்ததியனையாண்மேலோயாங்கவன்சுத்திபண்ணித்
திருந்தியதலத்திற்பின்யான்றெளித்திடத்திவலையென்மேல். (௧௨௫)

தெறித்திடவதனானுஞ்சென்றுநீராடிவந்தேன்
பொறித்தவல்வினைகளற்றாயென்றவள்புகலக்கேட்டங்
கெறித்தெழுகனலிற்சீறியானவன்றளிகைச்சேடங்
குறித்திவண்டிரியச்செய்தாய்குற்றமொன்றீதுநின்பால். (௧௨௬)

வேறு.

உண்டாய்த்தணங்கேகுலமேவிட்டுணருமுணர்வாலுதியங்கள்
கண்டார்யாவர்தாந்தம்மைக்கடையாயெண்ணிக்கணிப்பிறந்தோ
ரெண்டானின்றிப்பலகுலமாயாக்கைதாங்கும்வேதனைமால்
தொண்டாய்த்தொண்டருடன்கலந்தாலன்றோதீர்ந்துசுகந்துய்ப்பார் (௧௨௭)

முன்னைமறையோர்நான்கினாறும்முடிவுமிதுகாண்மொய்குழலை
உன்னைவேண்டியுரைக்கின்றேனொருநாளிவணங்குலப்பெருமை
என்னைவேண்டிப்பாகவதரிடத்துக்காட்டாதிருத்தியென
மின்னைநோக்கியிளையாழ்வார்விளம்பிவிண்டுவருள்செய்த. (௧௨௮)

வேறு.

குருமணியாயபெரியநம்பியைப்போய்க்கூடுதல்வேண்டுமென்றருள்சேர்
திருவுளத்தெண்ணித்தென்றிசைநோக்கிநடந்தனனிந்திரசித்தை
ஒருதிறற்கணையாலறுத்தரங்கத்திங்குவரிசூழ்பூமிவான்முழுதும்
பொருவருந்தன்சீர்ப்புகழினைநிறுத்திப்புங்கவன்புலம்பமுன்போனான். ()

வேறு.

அப்படிநிகழுநாளிலரங்கமாநகரந்தன்னில்
ஒப்பிலாவாளவந்தாரோங்குசீரடியினாளுந்
தப்பறமன்னிவாழுமுதலிகடம்மிலொன்றாஞ்
செப்பமார்பெரியநம்பிதன்னொடுசெப்புகின்றார். (௧௩௦)

வேறு.

ஆசிலாதநம்பிநமதாளவந்தார்பூதூரிற்
றேசுறுசீரிளையாழ்வார்தெரிசனத்துக்கதிபரெனப்
பேசினார்நம்மோடும்பின்பணைந்துகடாக்ஷித்தார்
ஈசனார்திருவருளாலவரிசைத்தவின்னுரையும். (௧௩௧)

பொய்யாகாதநீயின்னும்போயப்புலவன்றனக்கருள்கள்
செய்யாநின்றாயெனிலிந்தத்தெரிசனத்துக்கோருறுதி
மையார்கண்ணாளலர்மீதின்மங்கைமுதலிம்மாநிலத்தில்
ஐயாகேட்டியாளவந்தார்வரையிலுள்ளவாசிரியர். (௧௩௨)

பண்டுபண்ணாப்படிபண்ணிப்பாரைமுழுதுமுய்வித்தாய்
அண்டர்புகழும்பெரும்புகழாயேகென்றனுப்பியருளவவர்
புண்டரீகப்பதங்களினும்புவனமனைத்துமுண்டுறங்கும்
கொண்டல்வண்ணன்றாள்களினுங்குழைந்துவணங்கிப்பெரியநம்பி (௧௩௩)

விரைவாலேகியிளையாழ்வார்மேவுங்காஞ்சிநகரணைவான்
வரையார்மாடமாளிகைசூழ்மதுராந்தகத்தின்மன்னிவளர்
திரையாரேரிகாத்தபிரான்றிருமுனெய்தியிருந்தனர்முன்
புரையாநின்றவிளையாழ்வாருவப்போடன்றத்திருநகரில். (௧௩௪)

வந்தாரெதிர்கொண்டிருந்தவரைமலர்க்கண்ணாலேயுறநோக்கி.
யெந்தாய்சரணமெனப்பணிந்தின்றிரங்கியருளாயெனக்கமார்

சிந்தாமணியேயெனப்போற்றச்சீரார்பெரியநம்பிதிரு
நந்தாவிளக்காமிளையாழ்வார்முகத்தைநோக்கிநவில்கின்றார். (கரு௫)

வேறு.

எண்ணியின்றுனக்கதீவானெண்ணினேனிளையாழ்வானே
பண்ணியபாவமுற்றும்படிமிசையகல்வித்தோங்கும்
புண்ணியகோடியென்னும்பொருவறுவிமானப்பாங்கர்
நண்ணிமுன்னுளவந்தார்நம்மிடையுனக்குவைத்த. (கரு௬)

உறுதியையுரைக்கின்றேனுனுத்தமாகருத்தாற்பேணிப்
பெறுதியென்றருளிச்செய்தான்பெரியநம்பியுநால்வேதத்
தறுதியையுணர்ந்துநின்றவாசறுபூதூர்வள்ளல்
மறுமொழியிவையின்றநம்பிபால்வழுத்தலுற்றான். (கருஎ)

தேவரீரடியேன்றன்னையாளவந்தார்பாற்சேர்க்கப்
பூவடிவருந்தவந்துபுன்மையேனேடுமீண்டு
மூவரும்வணங்கியேத்தும்முதல்வளராங்கந்தனுண்
மேவுமுன்னுளவந்தார்வீடடைந்திட்டதன்மை. (கருஅ)

வேறு.

அறிந்தருளுமேயடியேனுக்கையுயிர்தொந்தமறப்
பிறந்தழியுந்தன்மையினைப்பேதையேன்பெசுவதென்
மறிந்துவிழுமிவ்வுடம்பினிலையாமைமகிழ்மாறன்
செறிந்தமிழ்ன்னின்னிலையிலதாமென்னமுன்னஞ்செப்பியதும். (கருகூ)

பொய்யாதேயதனலேபுலையேனையிப்பொழுதே
ஐயாநீயங்கிகரித்தருள்கவெனவடியிணையைக்
கையார்ந்தமலர்தூவிக்கண்கள்பனிநீர்ததும்ப
மெய்யார்ந்தசிந்தையனும்மேதினியில்விழுந்திறைஞ்ச. (க௬0)

பெரியநம்பியதுகண்டுபேரருள்கூர்ந்தருகழைத்திட்
டரியதனதாருயிரோடொன்றாகவெடுத்தணைத்து
விரிபொழில்சூழரங்கநகர்விட்டுயரும்வீடடைந்த
உரியவருளாளவந்தார்திருவடியையுவப்பினொடும். (க௬க)

பற்றென்னமுன்புரைத்துப்பகவற்சம்பந்தத்தால்
முற்றுமுனமுடையவர்க்கம்முகுத்தத்திலவைபண்ணி
யுற்றகுருபரம்பரையைத்துயத்தினொடுமுபதேசித்
தற்றமறவாளவந்தார்தமக்களித்தபொருளனைத்தும். (க௬உ)

ஒன்றொழியாதருள்செய்தங்கோங்கியசீர்ப்பெரியநம்பி
யன்றதற்பினிளையாழ்வாரோடுமிவையறைகின்றார்
நன்றிசெறிமனத்தினனேநாட்டார்க்காயிராகவனார்
வென்றிதரும்பரதாழ்வான்றிருமுடியில்வேதாந்தம். (௧௪௩)

செப்பரியதிருவடியின்மரவடியைச்செறிவித்துத்
தப்பின்றிவனம்புக்கதன்மைபோலாளவந்தார்
ஒப்பரியாய்திருவடியையென்றலைமேலுனக்காக
அப்பொழுதேவைத்தகன்றாரதுநீயுமறிகுதியால். (௧௪௪)

வேறு.

என்றிவைபெரியநம்பியியம்பிடவிளையாழ்வாரும்
நன்றிசேர்கருத்தாலந்தப்பொருளெலாநயந்துகொண்டங்
கொன்றியகாதலோடுமுத்தமக்குருவைநோக்கி
நின்றுமூவகையாலந்தவினைவுறுபொருளைக்கேட்பார், (௧௪௫)

அறளுறுசிந்தையெந்தாயறைந்தவிப்பொருள்கட்கெல்லாந்
தெருளுறுபிரமாணந்தானேததைச்செப்புபின்பென்
மருளறப்பிரமேயத்தைவாக்கினான்மொழிதிமாயை
யிருளறுபிரமாதாக்கள்யாரிதையியம்புகென்றார். (௧௪௬)

என்றிவையிளையாழ்வாரன்றியம்பிடப்பெரியநம்பி
நன்றுநன்றன்பாநீயோர்ஞானத்தின்கொழுந்தோவென்ன
வொன்றியகாதலோடுமுவந்துநீகேட்டவெல்லாம்
இன்றுனக்குரைக்கின்றேன்கேளெனவிரித்தியம்பலுற்றான். (௧௪௭)

வேறு.

ஓதுகின்றேன்பிரமாணந்தன்னைமுன்பிலுத்தமர்கள்
வேதநான்கிற்பலகலையில்விரிந்ததிரண்டபொருளனைத்தும்
மாதவன்பேர்சொல்லுமதேமைந்தாவோத்தின்சுருக்கென்றார்
ஈதின்பயனும்பிரமேயந்தனையுங்கேட்டியிசைக்கின்றேன். (௧௪௮)

அந்தநாமமுடையவனம்மத்திகிரியிலருள்வளர
இந்தவுலகத்தவருய்யவெடுத்தவாழிசங்கினொடு
முந்தநின்றதிருமாலாமுத்திவித்துக்காதலனே
பந்தவிவ்விரண்டுமுறும்பிரமாதாநீயெனப்பகர்ந்தார். (௧௪௯)

வேறு.

அத்திருமொழிகள்மூன்றையுங்கேட்டாங்கனலுறுமெழுகெனக்கரைந்தோ
ருத்தரமின்றிவிழிகணீர்சொரியவுரோமங்கள்சிலிர்ப்பமெய்விதிர்ப்பச்
சித்திரவுருவமிதுவெனநின்றான்சிறிதுபோதயோத்திமன்னவற்குப்
புத்திரனாகிமுன்பவதரித்தோன்புந்தியிலுணர்ந்திவைபுகல்வான். (௧௫0)

வேறு.

பங்கமில்லாமறைமுடிவிற்பரதத்துவத்தைப்பாரிடையே
சங்கைதீரவெடுத்தினிதாச்சாற்றவல்லதேசிகனா

ரெங்கள்கோவேயெனக்கென்னவிதயத்தெண்ணவிங்கிவ்வுரைத்
துங்கக்கடலைக்கடைந்தபிரான்சொன்னான்முன்பித்தூயவரும். (௧௫௧)

வேறு.

இன்றெனக்குரைத்தமந்திரந்தனக்கிங்கிசைந்தநற்பொருளெதுவென்ன
நன்றிசேரத்திகிரியினிலாழிநலந்திகழ்சங்கமுமேந்தி
நின்றவன்றிருமாலென்றனனிருவர்நிலைமையுநேர்பெறநோக்கில்
ஒன்றெனும்படியாயிருந்ததின்றந்தோவோங்குசீர்விட்டுணுசித்தன். (௧௫௨)

திருமொழிதன்னிற்பீதகவாடைத்தேவனேதேசிகனுருவாய்
இருநிலத்துற்றானென்றுரைத்திட்டவின்சொலைபின்றிவண்டெளிந்தேன்
மருவியபெரியநம்பியாய்த்தோன்றிவையகமனைத்தையுந்திருத்துங்
குருமணியாகிப்பேரருளாளர்குவலயத்தவதரித்தமையால். (௧௫௩)

எனவுணர்ந்திருந்ததேசிகக்குன்றினிணையடிமுடிமிசைதரித்துப்
புனைமலர்த்துழாயாய்குருமணியுருவாய்ப்போந்தனையோவெனப்பலகால்
மனமுறநிறைந்தவன்பினால்வணங்கிநின்றனன்வையகமுய்ய
இனமொருசெனனமெடுப்பனென்றெடுத்தஇலக்குவநம்பிபின்பிசைப்பான்.

இரைக்குமேழ்கடலுமணுவெனப்பெருகுமீனவாரிதிப்பெரும்புனல்சேர்
திரைக்கணாய்ச்சுழிக்குஞ்சுழிக்கணாயமருந்தெள்ளியோய்கேட்டிநான்முன்ன
முரைத்தமாப்பிரமாணமதுதனக்கர்த்தமோங்குசீர்ப்பிரமேயமதனை
நிரைத்தமாமாடக்காஞ்சிமாநகருணீபுகுந்தனுபவித்திடுவான். (௧௫௫)

வேண்டுமென்றெழுந்துசீபெரும்பூதூர்விமலனைத்தன்னுடன்கொண்டே
ஆண்டுவிட்டேகிக்காஞ்சிமாநகரிலணைந்தருளாளரைக்காட்டிப்
பூண்டகாதலனேபிரமேயமதுவாம்புரையறப்பற்றுதியென்றான்
ஆண்டகைமணக்காலநம்பியுமன்பிலாளவந்தார்க்கருளோடும். (௧௫௬)

மதுவிரிதுழாயானரங்கமாநகரின்மன்னுசீரங்கனைக்காட்டி
யிதுபொருளுங்கள்போனார்வைத்தவெலைபறுமிருநிதியென்னு
முதுமொழியொப்பக்கூறினானம்பிமுத்திவித்தாமிளையாழ்வான்
பதுமனைப்படைத்தான்றிருமுடிமுதலாப்பங்கயப்பாதுகைவரையா. (௧௫௭)

அன்பினான்மருவியனுபவித்துள்ளமனலுறமெழுகெனவுருகி
முன்புநானினைத்தநினைவெலாமுரைத்தமுதல்வனேசரணெனப்பணிந்தான்
புன்புலால்நுகருமரக்கர்கள்குலத்தைப்பொடியெழச்சுடுசரந்துரந்தான்
றன்பினாய்ப்பிறந்தன்றிந்திரன்பகைஞன்றன்னையும்பின்னையுந்தடிந்தான்.

[தொடரும்.]

உதவிப்பத்திராதிபர்.

ஆனைமங்கலம் செப்பேடு.

—⁂—

[௨௨௦-ம் பக்கத்தொடர்ச்சி.]

ஸோபாய வித்யா கதாகதாவ பாராவார பாரத்ருஶ்யாஶேஷ
ந்ருபவக்ர பாதபாதீகர கிரீடகோடி பதிதாநேக ரத்நாம்ஶு
ரஞ்ஜித பாதாம்புஜ பிஞ்ஜரத்ருத பாதபீடோ। ராஜராஜோ ராஜ
கேஸரிவர்மா ஸ்வஸ்ய ராஜ்யவர்ஷே ஏகவிம்ஶதிதமே நிகில
தராமணி திலகாயமாநே க்ஷத்ரிய ஶிகாமணி வளநாடு நாம்நி
ஜநபதநிபந்தே பட்டணகூற்ற நாம்நி ஜநபதேऽநேக ஸுர
ஸத்ம ஸத்ர ப்ரபாராம விஹார ஸௌத ராஜி ராஜமாநே
நாகபட்டணே நிஜமதி விபவ ஸம்பர் ஞாநாம்ஸ்மய ஜநகமே
வந ஶ்ரீவிஷயாதிநாஸ்மிகுஜந கல்ப பாதபேந ஶைலேந்த்ரவம்ஶ
ஸம்பூதேந ஶ்ரீவிஷயாதிபதிநா கடாஹாதிபத்யம் ஆதந்வதா
மகரத்வஜேநாதிகத ஸகல ராஜ வம்ஶ்யஸ்ய சூடாமணி வர்மண:
புத்ரேண ஶ்ரீமார விஜயோத்துங்க வர்மணா ஸ்வபித்ரு நாம்நா

---

(35) [வசனம்] கலைக்கடலைக் கரைகண்டவனும், அரசர்பலரும் வணங்குவதால் அவர்கள் முடிகளிலுள்ள இரத்தினங்களின் ஒளியால் மஞ்சளாகக் காணப்படும் கழலையுடையவனுமான ராஜராஜ ராஜகேசரி வர்ம்மனை க்ஷத்திரியசிகாமணி உலகபாரம்செய்கின்ற தனது இருபத்தொன்றுமாண்டில் நாடுகளிலே மணிபோன்றதான க்ஷத்திரியசிகாமணி வளநாட்டுப் பட்டணக்கூற்றத்திலே பலகோயில்களும் சத்திரமும் நீர் நிலைகளும் சோலைகளும் மாடமாளிகைகளும் நிறைந்த வீதிகளையுடைய நாகபட்டணத்திலே ராஜதந்திரங்களில் நிபுணனும், ஞானத்தால் சுர குருவும், அறிவாளிகளான தாமரைகட்கு ஞானசூரியனும் இரவலர்க்குக் கற்பகதருவும் ஸ்ரீவிஷயநாட்டிலே சைலேந்திரவம்சத்திலே பிறந்து கடசம் (பர்மா) என்ற நாட்டரசுரிமைபெற்றவனுமான மகரத்துவஜன் சூடாமணிவர்ம்மன்புத்திரன் மாறவிஜயோத்துங்கவர்ம்மன் தன் தகப் பன்போல் மேருமலையை நிகர்க்கும்படி கட்டிச் சூடாமணிவிகார

நிர்ம்மாபிதம் அதிஶயீக்ருத கநககிரி ஸமுந்நதி விபவம் அதிரமணீ
யம் சூடாமணி வர்ம்மவிஹாரம் அதிவிஶதே । ராஜாஜ்ஞாய தஸ்மிந் நவ
ஜநபதநிவஹே பட்டண கூற்ற நாம்நி ஜநபதே காரணீவஶி
க்ஷணே விஶ்வவீரோ வதாந்யம் ஶ்ரீமதாநைமங்கலாபிதாநம்
க்ராமம் ப்ராதாத் ॥ [௩௫]

உத்பந்நேந உத்தஸ்ய ஸவித்ரா சக்ரவர்த்திநா ।
ஶ்ராவஸ்யாஸ்ய ரமதே தஸ்மிந் தேவஸம்பதம் ப்ரஹ்மஜஸி ॥ [௩௬]

தஸ்மிந் ஹாஸந ராஜ்யஸ்தே த்ரைலோக்ய ராஜகஃ ।
ஶாஸநம் ஶாஶ்வதந்தோ காரயித்வா ஶிலாந்யவஃ । [௩௭]

ஶேஷோஶேஷாம் மஹீம் யாவத்தத்தே ஶேஷாஹீஶ்வரஃ ।
ஸ்தேயாத்தாவத்விஹாரோயம் விஹாரேண ஸஹாவநௌ ॥ [௩௮]

ஸோயம் கடாஹாதிபதிப்ரார்த்தநாநாம்
நிவாஸஸம்ப்ரதிஷ்டிதவ்யூஹாவஃ ।
ஸுமாதிநஃ ப்ரார்த்தயதே நரேந்த்ராந்
யத்தர்ம்மம் ஸதைதம் பரிரக்ஷதேதி ॥ [௩௯]

மென்று தன் தகப்பன்பேரிட்ட புத்தாலயத்துக்கு அப்பட்டணக் கூற்றத்திலுள்ள ஆனைமங்கலம் என்ற ஊரைப் பிடிசூழ்ந்து எல்லை கண்டுகொடுத்தான்.

(36) தனது பிதாவாகிய சக்கரவர்த்தியாற் கொடுக்கப்பட்டு, அவன் சொர்க்காரோஹணமானபின் (37) அச்சிங்காதனத்திலேறிய மதுராந்தகன் என்னும் பெயரையுடைய அவனதுபுத்திரன் இச் சாசனம் செய்துகொடுத்தான்.

(38) நாகராஜனான ஆதிசேஷன் இப்பூவுலகைத் தாங்குமட்டும் இந்தவிகாரம் நிற்கட்டும்.

(39) அப்படியே சகலகுணசம்பன்னனான கடாதிபதியாகிய நான் பின்வரும் அரசர்களையும் இத்தருமம் நிலைபெறுமாறுகாக்க என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஶ்ரீமத்யஸ்மிந் ஜகதி மஹிதே கோட்டயூராபிதாநே
லக்ஷ்ம்யாமந்யஜநி விமலே யோ வஸிஷ்டாந்வவாயே ।
ஸத்ஸம்ஸேவி விமலசரிதோ நந்தநாராயணாக்ய
ஶ்ரேஷ்டோ விப்ரஸ் ஸுசரிதமிமாம் ஸத்ப்ரஶஸ்திம் ॥ [௪௰]

தஸ்ய ராஜ்ஞோ மஹீம் ஸர்வாம் பாலயதோऽரிக்ஷத: ।
காஞ்சீவாயில் ஜாதோ ... ஸம்ஜாத: ॥ [௪௧]

மஹாதிகாரீ மதிமாம் தில்லையாளீ ஸமாஹ்வய: ।
யஜ்ஞ ... காஞ்சீவாயில் ஜாத: ॥ [௪௨]

யோ ராஜராஜமூவேந்தவேள இதி வ்யுதிதோ ஜநை: ।
தந்நியோகாதிதம் ஶாஸநம் ஶாஸநம் ஸாத்வகாரயத் ॥ [௪௩]

கடாஹாதிபதேஸ்தஸ்ய நியோகாத் பூர்வவர்மவாந் ।
குணாட்யோ ... ஜ: ॥ [௪௪]

விநீதோ ... ஹிதார்த: ।
ஶாஸநம் ஶாஸ்வதமிதம் ... ய: ॥ [௪௫]

---

(40) இலக்குமியின் வாசஸ்தானமான கோட்டையூரிலே வசிஷ்டகோத்திரத்திலே பிறந்து சற்சனரோடுபழகும் நந்தநாராயணன் என்னும் பிராமணோத்தமன் இந்தப் பிரசஸ்தியைச் செய்தான்.

(41–42) இந்த உலகைக் காப்பாற்றுபவனும் சத்துருக்களை அழித்தவனுமான அந்த அரசனுக்குக் காஞ்சிவாயில் என்ற ஊரிற் பிறந்த தில்லையாளி, மகாதிகாரி என்ற மந்திரியாவான்.

(43) இவனை இராஜராஜமூவேந்தவேள் என்று அழைப்பர். இவனுத்தரவின்படி இச்சாசனம் வெட்டப்பட்டது.

(44–45) கடகாதிபதியினுடைய கட்டளைப்படி அபிகாலன்பிள்ளையாகிய துவவூரவான் அணுக்கனான குணவானும் எஜமானகாரியதுரந்தரனுமான அவனால் இந்தக்காரியம் நிறைவேற்றப்பட்டது.

𑌰𑌾𑌜𑌰𑌾𑌜𑌮𑌹𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍋 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌪𑌰𑌾𑌹𑍍𑌵𑌯𑌃 ।
𑌕𑍃𑌷𑍍𑌣𑌚𑌰𑌿𑌤𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑌂𑌭𑌵𑍋 𑌵𑌿𑌮𑌹𑌾𑌮𑌤𑌿𑌃 ॥ [௪௬]

𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌦𑌾𑌮𑍋𑌦𑌰𑌨𑌾𑌮𑌧𑍇𑌯𑍌
𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌤𑍍𑌮𑌜𑍌 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌦𑌾𑌬𑍍𑌜𑌭𑍃𑌙𑍍𑌗𑍌 ।
𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌭𑌿𑌯𑌾𑌤𑍇𑌨 𑌚 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵
𑌶𑍍𑌰𑍀𑌰𑌜𑍋𑌨𑍀𑌰𑌜𑌵𑌾𑌰𑍁𑌨𑍇𑌤𑍍𑌰𑍌 ॥ [௪௭]

𑌶𑍂𑌰𑌾𑌵𑌮𑍇𑌤𑌤𑍍𑌪𑍁𑌤𑍍𑌰𑌶𑍍𑌚 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍋𑌽𑌪𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌨𑍍𑌯𑌾𑌸𑍇 𑌚𑌿𑌤𑍍𑌰𑌗𑍁𑌪𑍍𑌤𑍇𑌨 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑌾𑌃 ॥ [௪௮]

𑌹𑍋𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌵𑌯𑌤𑌿𑌲𑌕𑌾𑌃 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌪𑍁𑌰𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌾𑌃 ।
𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌿𑌮𑍇𑌨𑌾𑌮𑌲𑌿𑌖𑌨𑍍 𑌪𑌞𑍍𑌚𑍈𑌤𑍇 𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑌾𑌰𑌿𑌣𑌃 ॥ [௪௯]

(46-48) கண்ணனது வம்சத்திலே பிறந்தாலும், அவனையொவ்வாத வசுதேவரென்றுசொல்லப்படும் ராஜராஜமஹாசாரியாரது புத்திரனான கிருஷ்ணனும் அவன்மக்கள் சீரங்கன் தாமோதரன் என்ற இருவரும் சித்திரகுப்தனைப்போல் இவ்வெழுத்துக்களை வெட்டினர்.

(49) ஹோவியக்குடியிற்பிறந்த இந்த ஐவரும் இந்தச்சாசனத்தை வெட்டினார்கள்.

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

ஸ்ரீ:

மதிப்புரை.

திருக்குற்றாலக்குறவஞ்சி:-திருக்குற்றாலத்திற் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள சிவபிரான்மீது மேலகரம் திரிகூடராசப்பன்கவிராயமூர்த்திகளியற்றிய பிரபந்தங்களிலொன்றான குறவஞ்சிநாடகமென்பது அநேகவருடங்களுக்குமுன்னரே அச்சிடப்பெற்றதாயினும், அதன் இரண்டாம்பதிப்பு இப்பொழுது வெளிவந்திருக்கிறது. இதன் பதிப்பாசிரியராகிய மதுரைத்தமிழ்ச்சங்கவித்வான் ஸ்ரீ. மு. ரா. அருணாசலக் கவிராயரவர்கள் தமிழ்மொழியின்பொருட்டுச் செய்துவரும் பேருதவிகளுள்ளே இதனையும் ஒன்றாக அறிஞர்கள் போற்றிக்கொள்வரென்பதில் ஐயமில்லை. பிழையறப் பரிசோதித்துத் தெளிவான குறிப்புரையும் எழுதிச்சேர்க்கப்பெற்ற இவ் விரண்டாம்பதிப்பு மிகவும் செப்பமுற்று விளங்குகிறது.

இக்குறவஞ்சியின் ஆசிரியரான திரிகூடராசப்பன்கவிராயரவர்களின்வழித்தோன்றலாயுதித்துச் செந்தமிழ்ச்செல்வமும் பரோபகாரசீலமும் வாய்ந்த போலீஸ் டிப்டி சூபரிண்டெண்டெண்டு ஸ்ரீமாந். ராவ் சாஹிப் K. S. கற்பகவிநாயகம்பிள்ளையவர்கள் இப்பதிப்பை வெளிப்படுத்துவதிற் கண்ணுங்கருத்துமாய்க் கவிராயரவர்களுக்கு ஊக்கமளித்து உதவிபுரிந்ததுமட்டுமன்றி, இக்குறவஞ்சியைக்குறித்து அவர்கள் தாமே தம் மதிவன்மையா னாராய்ந்துகண்ட அரியபலவிஷயங்களடங்கிய ஆங்கிலமுகவுரையொன்றனையும் எழுதிச்சேர்த்துப் புத்தகத்தை மிகவும் அழகுறச்செய்திருத்தல் பெரிதும் போற்றற்குரியதே, மற்றும், இப்பதிப்பிற்காணும் விசேடங்கள் மிகப்பலவாயினும், விரிவஞ்சி அவற்றை முழுவதும் ஈண்டெடுத்துரையாமல் விடலாயிற்று. இதன் விலை ரூ. 1—0—0; வேண்டுவோர், தென்காசித்தாலூகா, மேலகரம், போலீஸ் டிப்டி சூபரிண்டெண்டெண்டு திரு, K. S. கற்பகவிநாயகம்பிள்ளையவர்களிடத்திலும், மதுரைப் புதுமண்டபம் புத்தகவியாபாரம், மகா-ா-ா-ஸ்ரீ S. கூடலிங்கம்பிள்ளையவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

கம்பராமாயணச்சுருக்கம்—கிஷ்கிந்தாகாண்டம் :—தமிழ்மொழியிற் கம்பநாடரியற்றிய இராமாடணம் மிகவும் விரிந்து பரந்த செய்யுட்டொகையுடையதாயிருத்தலின், அடிமுதல் முடிவுகாறும் அவ்விராமாயணக்கதையின்சுவையினை நுகர்ந்து இன்புறுதல் எல்லார்க்கும் எளிதினில்வாய்ப்பதில்லை. ஆகையால் அதன் கதைப்போக்கையுணர்தற்கு இன்றியமையாதனவாய் இனிமையும் தெளிவுமுள்ள பாக்களை ஒருசேரத்தொகுத்துச் சுருக்கமானபதிப்பொன்றை அச்சிட்டுதவுதலும் பயனுடைத்தென்றுகருதிச் சென்னை ஸி. குமாரசாமி நாயுடுஸன்ஸால் பாலகாண்ட அயோத்யாகாண்ட ஆரணியகாண்டப்பகுதிகள் தனித்தனியே இதற்குமுன் அச்சிடப்பட்டு, இப்பொழுது கிஷ்கிந்தாகாண்டமும் வெளியிடப்பெற்றுள்ளது. இப்புத்தகத்திலடங்கியசெய்யுட்களின் தொகை 372. இதற்குச் சிறந்ததொரு குறிப்புரையும் எழுதிச்சேர்க்கப் பெற்றிருப்பது இதன் ஆசிரியரின் ஆழ்ந்த ஆராய்ச்சித்திறமையை விளக்குகிறது. இடையிடையே கதைத்தொடர்புகாட்டி இதன் செய்யுட்களைக் கூட்டிமுடிக்கும் உரைநடைப்பகுதிகளையும் இதில் அமைத்திருத்தல் படிப்பவர்களுக்கு மிகுதியும் விருப்பத்தையளிக்கின்றது. இப்புத்தகத்தின் விலை அணு 13 ; வேண்டுவோர் சென்னையில் மகா-ா-ா-ஸ்ரீ ஸி. குமாரசாமிநாயுடுஅவர்கள் கம்பெனியிற் பெறலாம்.

தமிழ்ப்பேரகராதி:—சென்னைச் சருவகலாசங்கத்தார் பதிப்பித்துவரும் இவ்வகராதியின் மூன்றாந்தொகுதியின் இரண்டாம்பகுதி இப்பொழுது வெளியாயிருக்கிறது. இதில் 'சந்துஷ்டி' என்னும் வார்த்தைமுதல் 'சில்லாவலி' என்னுஞ்சொல் இறுதியாக, உலகவழக்கும் செய்யுள்வழக்கும் தழுவிய எத்துணையோ பல தமிழ்ச்சொற்களுக்கு வரலாறுகாட்டிப் பொருள்விளக்கமும் எழுதப்பட்டுள்ளது. இவ்வகராதிவேலையைமேற்கொண்டுநடத்தும் அதிகாரிகள் வழக்கம்போலவே இதில் நிறைந்த கவனஞ்செலுத்தியிருத்தல் மிகவும் திருப்தியளிக்கின்றது. சுமார் 160 பக்கங்களுள்ள இப்பகுதியின் விலை ரூ. 2 ; வேண்டுவோர் The Madras Law Journal office, Post Box 604, Mylapore, Madras என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[தொகுதி உடு-ன் ௬௪௯௬-ம் பக்கத் தொடர்ச்சி.]

சூர்ப்பநகை இராமனைக் காமுறல்.

[மேலேகூறியவாறு சூர்ப்பநகை, இராமனது ஒவ்வொரு அவயவத்தின் செவ்விய அமைப்பையும் சிறந்த வனப்பையும் முழுத்திருமேனியின் எழிற்பெருக்கையும் நினைந்து, அவன் பேரழகில் ஈடுபட்டு, அவன் மீது கொண்ட காமம்-கடலைக்காட்டிலும் பெருக, அவள்கற்பு-கொடாத பொருளாளன்புகழ்போலக் குறைய, அவன் தோள்மீது பார்வையைச் செலுத்திப் பதித்தாள். பதித்தவள், பறிக்கமாட்டாதவளாகி, 'இவன் மார்பினைத் தழுவப் பெறேனேல், இன்னமுதுண்ணினும் என்னுயிர் தரியாது; தழுவுதல் அல்லது சாதலன்றி வேறு கதி ஏதுமில்லை.' யென்று கருதி, அவன் எதிரே சென்று நிற்க எண்ணங்கொண்டாள். கொண்டவள், கோரப்பல்லோடுகூடிய குரூபமான இந்த இராட்சச வடிவைக் கண்டால் அருவருப்பானென்றெண்ணி, இலக்குமிமந்திரத்தைச் செபித்து மிகவும் அழகிய மானுடப்பெண்வடிவங்கொண்டாள். கொண்டு, மின் இறங்குவதுபோல, விண்ணிலிருந்து மண்ணில் இறங்கி இராமன் இருந்த இடத்தை நோக்கிச் சென்றாள்.

இராமன், அவள் காற்சிலம்பொலி காதுள் நுழைய, இவ்வொலி ஒரு பெண்ணின்வரவை முன்னறிவிப்பதென்றுகருதி அவ்வொலி வரும் திசையை நோக்கினான். கடலினின்று வந்த அமுதம்போல விண்ணினின்று வந்த அமுதமென்று சொல்லும்படி வந்த அவளைக் கண்டான். கண்டு, இவ் வடிவம் மூவ்வுலகத்துள் எவ்வுலகத்தும் இல்லாதது, இவ் வடிவழகி யாவள்? இவளை ஒப்பார் எவருமில்லை யென்றெண்ணுநிற்க, அவன்முன்பு அவள் சென்று, செங்கைகூப்பிச், சிறிது நாணங் காட்டிச், சற்றே முகங்கோட்டி நேராகப் பாராமல் பக்கப் பார்வையாகப் பார்த்து நின்றாள்.

இராமன், "உன்வரவு நல்வரவாகுக, நீ வந்தது எங்கள் பாக்கியம். உன் ஊர் எது? பேர் யாது? உற்றார் யாவர்? உரை என, அவள் "யான்

பிரமதேவரதுபௌத்திரரான விச்சிரவசுமுனிவரின்புத்திரி, சிவபெருமானுடையதோழனான குபேரன் தங்கை; எட்டுத்திசையானைகளின் பலத்தைத் தொலைத்து வெள்ளிவெற்பினை வேரோடு பேர்த்த திரிலோகாதிபனான இராவணேசுரனுக்குப் பின் பிறந்தேன். காமவல்லி யென்னும் பெயரினேன்" என்றாள். எனவே, இராமன், இவள்செயல் சீரியதாயில்லையென்றுசிந்தித்து,ஐயங்கொண்டநெஞ்சினனாய் "இராவணன் இராக்கதன்: நீ அவன் தங்கையானால், உனக்கு இந்த உரு வந்தவிதம் எந்தவிதம்?" என்றான். அவள், "யான் இராக்கதரோடுவாழும் வாழ்வை வெறுத்துத் தவஞ்செய்து இவ்வுருப்பெற்றேன்" என்றாள். அவன், மீளவும் கேள்விகேட்பானாய் "இந்திரனும் ஏவல்செய்யும் இராவணன் தங்கைக்குரிய செல்வச்சிறப்புடன்வராமல், தனியாகவந்தகாரணம் யாது?" என்றான். அவள "யான் அந்தத் தீயாரோடு சேராமல் தேவர்களோடும் முனிவர்களோடும் சேர்ந்திருக்கின்றேன். இங்கே ஒரு காரியமாக உன்னைக் காணவந்தேன்" என்றாள். அவன், தெரிவையர் சிந்தை தெரிய அரியது, இவள்கருத்து நன்றன்று என்று மனத்துள்ளே எண்ணி வாயால் "என்னிடம் நீ வந்த காரியம் யாது? அது செய்யக்கூடியதானால், செய்து உதவுவேன்" என்றான்.]

சூர்ப்பநகை தன் கருத்தை உரைத்தல்.

369 "தாமுறு காமத் தன்மை தாங்களே உரைப்ப தென்ப
தாமெனல் ஆவ தன்றால், அருங்குல மகளிர்க் கம்மா!
ஏமுறும் உயிர்க்கு நோவேன், என்செய்கேன், யாரு மில்லேன்;
காமனென் றொருவன் செய்யும் வன்மையைக் காத்தி" என்றாள்.

இ—ள். "மேன்மையான குடியிற்பிறந்தபெண்களாயுள்ளார்க்குத் தாங்கள் அடைந்த காமத்தின் இயல்பைத் தாங்களே வாய்விட்டுக்கூறுவது கூடுமென்பது (வார்த்தைமட்டில் ஆவதேயன்றிக் காரியத்தில்) ஆவதன்று (அதாவது குலமாதர் தங்கள்காமத்தைத் தாங்களே வெளியிட்டுக் கூறக்கூடுமென்று சொல்லிவிடலாம், ஆனால் அது அவர்களால் ஒருகாலும் செய்ய முடியாத தென்றபடி); 'தான் கொண்ட காமத்தைத் தீர்க்கமாட்டாமையால்) கலங்குகின்ற என் உயிர் (படும்பாட்டு)க்கு வருந்துகின்றேன்; (அதற்கு உதவிசெய்ய என்னால் இயலாமையால்

யான் வருந்துவதன்றி வேறு) யாது செய்வேன். (எனக்குத் துணையாவார்) யாரும் இல்லாதேன். (இருந்தால், அவரைக்கொண்டு என் காமத்தைச் சொல்லச் செய்திருப்பேன்; இல்லாமையால் யானேசொல்லக் கடவேனானேன்). மன்மதனென்று சொல்லப்பட்ட (மாபாவி) ஒருவன் செய்யும் கொடுமையை (அவன் செய்யாமல்) தடுப்பாயாக" என்று (சூர்ப்பநகை) சொன்னாள்.

ஆம்-கூடும். 'ஆமெனல் ஆவது அன்று' என்பதற்குத் தக்கது எனல் தக்கதன்று அதாவது தக்கதன்று என்பது முந்திய உரை. ஆல் அசை. அருந்துலமகளிர் என்பதில் அருமை மேன்மைப்பொருட்டு. அம்மா வியப்பிடைச்சொல். ஏமுறல் ஏமம் உறல் என்பதன் விகாரம். ஏமம்—கலக்கம். காமம் உறல் காமுறலென வழங்குதல் காண்க. வன்மை-வன்கண்மை—கொடுமை. 'யாருமில்லேன் என்செய்வேன்' என மாற்றி யாருமில்லாத யான் (என் காமத்தை யானே சொல்லாது, வேறு யாது செய்வேன் என்று முந்திய உரைகாரர் பொருள்கூறியிருப்பது காண்க. காத்தி-தடுப்பாயாக. "செல்லிடத்துக் காப்பான்" என்ற குறளிற்போலக் 'காத்தல்' தடுத்தற்பொருள்குறித்தது.

சூர்ப்பநகை, முடிவில், தன்காமத்தைத் தான்கூறுந் துணிவுடையாளாதலால், உரைத்தலாகாதென இயல்பாகவும் சுருக்கமாகவும் கூறாமல், 'உரைப்பதென்பது ஆமெனல் ஆவதன்றால்' எனத் தங்கித்தங்கித் தாமதமாக நீட்டிக் கூறினாளென்க. அவள், குலமாதர்-தம் காமத்தைத் தாம் கூறமாட்டாரென்ற முகவுரையால், தன்காமத்தைத் தான் கூறப்போவதைக் குறிப்பாக உணர்த்தி, அதனைக் கேட்க இராமன்மனத்தைச் சித்தப்படுத்தி, அவ்வாறு கூறுவது தகாதசெயலென அவன் எண்ணாதபடி செய்யமுயன்று 'ஏமுறும் உயிர்க்கு நோவேன், என்செய்வேன், யாரும் இல்லேன்' என்றதனால் அத் தகாதசெயல்செய்தற்குச் சமாதானங் கூறினாளென உயத்துணரவைத்தார்.

[மேலேகூறியவாறு சூர்ப்பநகைசொல்லக்கேட்ட இராமன், இவள் நாணம்இல்லாள் நல்லளும் அல்லாள் என்றெண்ணி வாய்பேசாமல் மௌனமாகச் சும்மா இருந்தான். அவள், அவன் உள்ளக்கருத்தை உணராளாய், என் காமநோயை அறிந்து அருள்செய்ய எண்ணுகின்று

ளோ, அருளாது மறுக்க எண்ணுகின்றானோ என்ற சந்தேகத்தினால் ஊசலாடி உலேயும் உளத்தினளாய் மீளவும் தன்கருத்தை வேறுவகையாக வெளியிட்டு விளம்புவாளானாள்.]

370\. "எழுதரும் மேனியாய் ஈண் டெய்திய தறிந்திலாதேன்,
முழுதுணர் முனிவர் ஏவல் செய்தொழில் முறையின் முற்றிப்
பழுதறு பெண்மை யோடும் இளமையும் பயன் இன் றேகப்,
பொழுதொடு நாளும் வாளா கழிந்தன போலும்" என்றாள்.

இ-ள். "(சித்திரத்தில்) எழுதவொண்ணாத திருமேனியுடையானே! நீ இங்கே வந்திருப்பதைத் தெரிந்தேனில்லை. (அதனால்) முற்றும் உணர்ந்த முனிவர்களுக்குக் குற்றேவல்செய்யும் பணியை முறைப்படி செய்துமுடித்துக்கொண்டிருந்ததனால், எனது பெண்ணலமும் யௌவன பருவமும் பயன்படாமற் போக, (என்னுடைய ஆயுள்) நாள்கள் (எல்லாம்) வீணே கழிந்தன" என்றாள்.

எழுதல்-(சித்திரத்தில்) எழுதுதல்-சித்திரித்தல். முற்றி-முடித்து. முற்ற என்பது முற்றியெனத் திரிந்துநின்றது. "சொற்றிரி யினும் பொருள் திரியா வினைக்குறை". பழுது—குற்றம். பெண்மை—பெண் தன்மை; "தாக்கணங்கும் ஆண் அவாம் பெண்மை" என்பதிற்போலப் பெண்ணலம் என்னும்பொருள் குறித்தது. இன்று, இன்றி யென்பதன் விகாரம். பொழுது, நாளின்பகுதிகளாகிய சிறுபொழுதுகளைக் குறித்தது. "மாலை, யாமம், வைகறை, எற்படு—காலை, வெங்கதிர் காயும் நண்பக லெனக்—கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்." ஒருநாளை ஆறுபாகங்களாக வகுத்துச் சிறுபொழுது ஆறுவகைப்படுமெனக் கூறுவாருமுளர். வாளா—வீணாக. போலும் ஒப்பில்போலி. 'எழுதருமேனியாய்' என்றதுபோல வாலிவதைப்படலத்தில் 'ஓவியத் தெழுதவொண்ணா உருவத்தாய்' என்பது வருதல் காண்க.

ஒருநாளுக் கொருமுறை இன்பம்நுகர்தலோ டமையாது ஒவ்வொருநாளும் அதனதன்பகுதிகளாகிய சிறுபொழுதுகள் அறுபொழுதுகளினும் இன்பம் அநுபவியாமல் வாணாள் வீணாளாய்க் கழிந்தனவென்னுங் கருத்தை உட்கொண்டு சூர்ப்பநகை நாள்கள் வாளா கழிந்தன என்னாது "பொழுதொடு நாளும் வாளா கழிந்தன" என்றாளென்க.

[இவ்வாறு சூர்ப்பநகை சொல்ல, இராமன், இந்த இராட்சசி நீதி நெறியில் நில்லாதவள் என்றெண்ணி "நீ அந்தணர்குலத்தில் அவதரித்த வள்; நான் சத்திரியசாதியிற் சனித்தவன்; ஆதலால் உன்விருப்பப்படி செய்தல் சாதிமுறைக்குத் தகாது" என்றான். அவள், "என் தந்தை அந்தணனாயினும், என் தாய் அரசாண்ட அரக்க அரசர்குலத்திற் பிறந்தவள்; ஆதலால் நமது சேர்க்கை சாதிமுறைக்குப் பொருந்தியதே. நீ இணங்காயானால் இறக்கத்துணிந்திருந்தேன். இதன்முன், சாதி தான் தடையாகச் சம்மதியாதிருந்தாயென்றால், இப்போது, அது நீங்கிவிட்டதனால், இனி, யான் உன் அருள்பெற்று என் உயிரை இறவாமல் வாழ்ந்திருக்கக் காண்பேன்" என்றாள்.

ஆசையையுடைய அவள் அவ்வாறு கூறக்கேட்டு இராமன், "எவ்வாறாகவும் இராக்கதரோடு மானுடர் சம்பந்தம் செய்தல் தகாதென்று சான்றோர் சாற்றுவர்" என்றான். அவள் தன்னை இராவணன் தங்கையென்று கூறியது தவறு என்று எண்ணி "யான் தேவரைப் பூசித்து, இழிவான இராக்கதப்பிறவி நீங்கி, இவ்வுரு எய்தினேனென்று முன்னேயே சொன்னேனே" என்றாள். அவன் "உன் தமயன்மாருள் ஒருவனோ, உலகமூன்றுக்கும் ஒரே தலைவனாக உள்ளான்; மற்றொருவனோ, திக்குப் பாலகனான குபேரன்: அவர்கள் கொடுத்தால் உன்னைக் கொள்வேன். தனியளாயுள்ள உன்னை வேறுயாருமில்லாத தனியிடத்தில் சந்தித்ததற்கே அவ் ஆற்றல்மிக்கார் யாதுசெய்வரோவென்று அஞ்சுகின்றேன்" என்றான். அவள் "கடவுள் கருணைகூர்ந்து கூட்டக் காதலிருவர் கருத்தொத்துக் கலக்கின்ற கந்தருவமணமென்பதொன்றுண்டன்றோ. அந்த மணத்தை நாம் அநுட்டித்தோமானால், அது ஆனபின் அதனை அண்ணன்மார் ஆதரத்தோடு அங்கீகரிப்பார்கள். அந்த மணத்தினால் ஆகும் நன்மைகள் அனந்தம். நீயோ, தனியனாய்த் தவசியாய் இருக்கின்றாய். அவர்களோ, தவசிகளோடு சாலப் பழம்பகைமை படைத்தவர்கள். அவர்கள் உன்னோடு உறவாவதற்கு இது ஏற்ற உபாயம். இதனால் அவர்கள் மண்ணுலகன்றி விண்ணுலகையும் உன்னுடைய ஆட்சிக்கு உள்ளாக்கி நீ இட்ட கட்டளைகளை இயற்றுவாராவார்" என்றாள்.]

சூர்ப்பநகை சொன்னதைக் கேட்டு இராமன் பரிகசித்தல்.

371. "நிருதர்தம் அருளும் பெற்றேன்; நின்நலம் பெற்றேன்; நின்னோ
டொருவரும் செல்வத் தியாண்டும் உறையவும் பெற்றேன்; ஒன்றோ,
திருநகர் தீர்ந்த பின்னர்ச் செய்தவம் பயந்த" தென்னா
வரிசிலை வடித்த தோளான் வாள்எயி றிலங்க நக்கான்.

இ-ள். "(ஆ! ஆ!) அரக்கருடைய அருளையும் பெற்றேன். உன்னுடைய இன்பத்தையும் உற்றேன். (இவையல்லாமல்) நிலையான செல்வ வாழ்க்கையில் எந்தக் காலமும் உன்னோடு கூடி வாழவும் பெற்றேன். அயோத்தியை அகன்றபின்பு நான் செய்த தவம் தந்த பயன் ஒன்றோ? (பலவாயிருக்கின்றன)" என்று சொல்லி (இராமன்) ஒளியுள்ள பற்கள் (வெளியில்) விளங்கச் சிரித்தான்.

நலம் - இன்பம். ஒருவரும் - நீங்கரிய - நீங்குதல் இல்லாத - நிலையான. யாண்டும் - எக்காலமும். ஒன்றோ - ஒன்றுதானோ. திருநகர், அயோத்தியைக் குறித்தது. தீர்ந்த - நீங்கிய. பயந்தது - தந்தது - தந்தபயன். என்னா - என்று சொல்லி. வரிதல் - கட்டுதல். வரிசிலை - கட் டமைந்த வில். வடித்த - வசமாக்கிய. வரிசிலை வடித்த தோளான் - கட்டமைந்த வில்லைத் தன்வசமாக்கிய தோளான் - வில் லேந்திய தோளான். வாள் - ஒளி. எயிறு - பல். நக்கான் - சிரித்தான். வரிசிலை பிடித்த தோளா னென்றும் பாடம். ஒன்றோ தந்தது என்றும் தந்தது ஒன்றோ என்றும் பொருத்திப் பொருள்கொள்ளல் பொருந்தும்.

[சீதாதேவி பன்னசாலையினின்று இராமன்பக்கம் வரச், சூர்ப்பநகை கண்டாள்.]

சீதையைப் பார்த்துச் சூர்ப்பநகை திகைத்தல்.

372. மருஒன்று கூந்தலாளை வனத்திவன் கொண்டு வாரான்;
உருஇங்கி துடையராக மற்றையோர் யாரும் இல்லை;
அரவிந்த மலருள் நீங்கி, அடியிணை படியில் தோயத்,
திரு,இங்கு வருவாள் கொல்லோ? என்றுளம் திகைத்து நின்றாள்.

இ-ள். மனையாளை இவன் (கடுமையான) காட்டுக்கு அழைத்து வந்திருக்கமாட்டான். இந்த வடிவழகுடையவராக வேறு எந்தமாத

ரும் இந்த வனத்தில் இல்லை. (இவள் இலக்குமியேயென் றெண்ணும்படி எழில்மிக்காளா யிருக்கின்றாள்.) இலக்குமி தாமரைமலரைவிட்டு நீங்கிக் கால்களிரண்டும் பூமியிற் படிய (நடந்து) இந்த வனத்துக்கு வருவாளோ? (வரக் காரணமில்லையே) என்று நினைந்து சிந்தை மயங்கி நின்றாள்.

மரு - வாசனை. ஒன்றுதல் - பொருந்துதல். இது உரு உடையராக யாரும் இங்கு இல்லை யெனக் கூட்டுக. இது உரு - இந்த வடிவு. "இதுபொழுது காத்திலையேல் எமக்கிறுதி யின்றேயாம்" எனக் காஞ்சிப்புராணத்தில் இதுபொழுது இந்தப்பொழுது என்று பொருள்பட வருதல் காண்க. மலருள் நீங்கி - மலரினின்று நீங்கி. ஏழன் உருபு ஐந்தன் உருபுப் பொருளில் வந்த உருபுமயக்கம். "யாதன் உருபிற் கூறிற் றாயினும் - பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்". படி - பூமி. 'திருவிங்குவந்ததென்னோ' என்பதும் பாடம்.

இதற்கு முந்திய பாட்டிற் சீதையைச் சூர்ப்பநகை "கண்ணிற் கண்டாள்" என்றதனால் சீதையின் திருமேனிக் காட்சி சூர்ப்பநகை கண்ணுக்குப் புலனானதென்று கூறியவர், இந்தப் பாட்டில் "மரு ஒன்று கூந்தலாள்" என்றதனால், சீதையினது கூந்தலின் மணம் சூர்ப்பனகை மூக்குக்குப் புலனானதை உய்த்துணரவைத்தார்போலும்.

பொதுவாகப் பெண்ணைக் குறிக்கும் 'மரு ஒன்று கூந்தலாள்' என்ற சொற்றொடரைச் சிறப்பாக மனையாளைத் தெற்றெனப் புலப்படுத்தும்படி சந்தர்ப்பச் சார்புபற்றிப் பிரயோகித்திருக்கும் சாதுரியமான கவிநுணுக்கம் கவனிக்கத்தக்கது. இங்கே கூந்தல்மணம், 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் கவியிற் கூறப்படும் இயற்கைமணமாகவாயினும், சூட்டப்பெற்ற மலர்களினின்று கொண்ட செயற்கைமணமாகவாயினும், இவ்விருவகை மணங்களும் கலந்த மணமாகவாயினும் கொள்ளும்படியிருத்தல் காண்க.

'அடியிணை படியில் தோய' என்றது தெய்வங்களின் பாதங்கள் பூமியிற் படிதலில்லையென்பதுபற்றிக் கூறியது. "இந்நிலத்துளோர் ஏக லாவதற் கெளிய தானமோ! அரிய வானுளோர் - அந்நிலத்து வெப் பாற்ற லாமையா லல்ல வோநிலத் தடியி டாததே" என்ற கலிங்கத்துப்பரணிப் பாலைவருணனைப்பாட்டைப் பார்க்க.

உலகத்துள்ள வனப்புக்கள் அனைத்துக்கும் உறைவிடமாகவுள்ள எந்தத் தெய்வத்தின்மந்திரத்தைச் சிறிதுமுன்பு செபித்து இந்தப் பேரழகுவாய்ந்த பெண்ணுருப் பெற்றிருக்கின்றேனே, அந்த மகாலக்குமியே இவளென் றெண்ணுகின்றேன்; ஆயின், மென்மையான பூவின் மீது வீற்றிருக்கும் அந்தத்தேவி, வன்மையான பூமியின்கண்ணே வருவாளா? வரினும், தெய்வங்களுக் கியற்கையான ஆகாயசஞ்சாரத்தை அகலவிட்டுப் பாதங்கள் பார்மீது படிய வருவாளா? வாராள்: இவள் மனையாளுமல்லள், மலர்மகளு மல்லள்: மற்று யாவளென்று தெரிய கில்லேனென்று சிந்தை திகைத்துநின்றாள் சூர்ப்பநகை யென்க.

சூர்ப்பநகை சீதையின் அழகில் ஈடுபடல்.

373. பண்புற நெடிது நோக்கிப் படைக்குநர் சிறுமை யல்லால்,
எண்பிறங் கழகிற் கெல்லை யில்லையா மென்ன நின்றாள்;
கண்பிற பொருளிற் செல்லா! கருத்தெனின் அஃதே! கண்ட
பெண்பிறந் தேனுக் கென்றால், என்படும்! பிறருக் கென்றாள்.

இ - ள். (சூர்ப்பநகை, சீதையின் அழகை, அதன்) பண்பு (கண்ணினுங்கருத்தினும்) பொருந்தும்படி, நெடுநேரம் நோக்கி (ப் பெருவியப்புற்று, மிக்க அழகுடைய பொருள்களைக் காட்டும் சித்திரங்களோ, சிலைகளோ, கவிகளோ, எவையும் பூரண அழகுடையவைகளாகக் காணப்படவில்லை; அவைகள் குறைந்த அழகுடையவைகளா யிருத்தற்குக் காரணம் அவைகளை) ஆக்கியோரின் (திறமைக்) குறைவேயன்றி அழகுக்கு (க் குறைவில்லை, அதற்குக் குறைவில்லையென்பானேன்,) எல்லையே யில்லை (என்று இவள்பாற் கண்டேன். இவள் அழகு, பார்க்கப் பார்க்க வளர்வதாய், எவ்வளவுநேரம் பார்த்தாலும் முழுதுங் காணமுடியாமல் எல்லை யில்லாததா யிருக்கின்றது.) என்றெண்ணி நின்றாள். (நின்றவள், இவளைப்) பார்த்த பெண்ணாய்ப் பிறந்த எனக்கே, கண்கள் (இவளைவிட்டு) வேறுபொருள்கள்மேற் செல்லமாட்டா! மனமோவென்றால் (அதுவும்) அத்தன்மையதே! என்றால், (இவளைக் கண்ட) ஆண்மக்களுக்கு (அவர்கள் கண்ணும் மனமும்) என்ன தன்மையுறும்! என்று கருதினாள்.

பண்பு, சீதையின் அழகின் பண்பைக் குறித்தது; எவ்வாறெனின், இப்பாட்டில் 'நோக்கி' என்ற வினைக்கு, முன்பின் தொடர்ச்சி

யால், 'சூர்ப்பநகை' தோன்றாக்கர்த்தாவாயிருத்தல்போலச் 'சீதையின் அழகு' தோன்றாச் செயப்படுபொருளாயிருக்கின்றது. பண்பு, அவ் வழகின் பண்பைக் குறித்ததென்க. பண்பு - குணம் - தன்மை. உற - பொருந்த. நெடிது - நெடுநேரம். உறநோக்கி - (கண்ணினும் கருத்தினும்) பொருந்தப் பார்த்து. அநுமான் இராமலக்குமணர்களை (அவர்கள் வடிவு தன் கண்ணினுங் கருத்தினும் பொருந்திப் பதிய)ப் பார்த்ததை அநுமப்படலத்தில் 'என்பன பலவும்' என்ற கக-ம் கவியில் 'எய்த நோக்கி' என்றதுபோல, இங்கே 'உறநோக்கி' என்றார். படைக்குநர் - சிருட்டிப்போர். அடுத்த பாட்டிற் கடவுளருள்ளே சிருட்டிகனை 'கமலத்துக் கடவுள்தானே' என்றதனால், இந்தப் பாட்டிற் 'படைக்குநர்' என்பது மக்களுள்ளே சிருட்டிகரான சித்திரிகர் முதலாயினோரைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டது. நீதிநெறிவெண்பாவில், 'கலைமகள் வாழ்க்கை' என்ற பாட்டில், கவிஞர், சிருஷ்டிகர்த்தாக்களாகப், பிரமனோடு உவமிக்கப்பட்டிருத்தல் காண்க. சிறுமை - குறைவு. அல்லால் - அல்லாமல். எண் - மனம். பிறங்கல் - விளங்கல். எண் பிறங்கு அழகு - (கண்வழிச்சென்று) மனத்துள் விளங்கும் வனப்பு. ஆம் அசை. அஃது, 'பிறபொருளிற் செல்லா' என்ற சொற்றொடர் நிற்றற்குரிய இடத்து அச்சொற்றொடர்ப் பொருள் தந்து நின்றது. 'அது' என்பது இவ்வாறு பொருள்படும்படி நாலடியாரில் 'எனதெனதென்றிருக்கும்' என்ற வெண்பாவில் 'யானும் அதனை அது' என்ற ஈற்றடியில் வருதல் காண்க. 'பெண்ணாகப் பிறந்தேன்' என்பதை விளக்கங் குன்றாமல் நயம்படச் சுருக்கிப் 'பெண்பிறந்தேன்' என்றார். இதுபோல, 'ஆணாகப் பிறந்த' என்பது, 'ஆண் பிறந்த' எனத் திருவடிதொழுதபடலத்தில் 'மாண்பிறந்தமைந்த' என்ற ௭௦-ம் பாட்டில் வருதல் காண்க. 'என்படும்' என்பதற்கு முந்திய உரைகாரரொருவர் 'என்னபாடு படும்' என்று பொருள் கூறினர். அப்பொருள் இவ்விடத்துக்குப் பொருந்துமாயினும், கம்பர் 'என்படும்' என்பதனாற் பல இடங்களிற் குறிக்கும் பொருள் 'எத்தன்மையுறும்' என்பதாமென இந்த இன்கவித்திரட்டில் 357-ம் பாட்டுரையில் மெற்கோள் காட்டிக் கூறியிருத்தல் காண்க. முந்திய பாட்டில் எந்தப் பெண்ணையும் குறிக்கும் 'மருவொன்று கூந்தலாள்' என்பது மனையாளைக் குறித்தல்போல, இந்தப் பாட்டில் ஆண்மக்கள் பெண்மக்கள் ஆகிய இருபாலாருக்கும்

பொதுவான 'பிறர்' என்ற சொல் ஆண்மக்களைமட்டும் குறிக்கின்றது. 'பிறர்' என்றதனால் மோனையை நிரப்பி அது இவ்வாறு பொருள்படும்படி பிரயோகித்திருக்கிற கவிசாதுரியம் கருதுதற்குரியது.

இங்கே சூர்ப்பநகை சீதையின் அழகை நெடிது நோக்கி அழகிற்கு எல்லையில்லை யென்றது, மிதிலைக்காட்சிப்படலத்தில் உ௫-ம் பாட்டில் சீதையின் அழகைப்பற்றிக் கூறிய "கமையாள் மேனி கண்டவர் காட்சிக் கரைகாணார்" என்றதனோடு கருத்தொத்திருத்தல் காண்க.

சீதையின் அழகு இந்தக் கவியிற் சிறப்பித்துக் கூறப்பட்டிருத்தல்போல, எம்மொழியினும் உள்ள எந் நூலினும், இந் நூலிலேயே வேறெவ்விடத்தினும், பெண்ணழகு சிறப்பிக்கப்படவில்லை யென்று செப்பலாம். "பெண்டிரும் ஆண்மை வெஃகிப் பேதுறும்" என்று கம்பருக்கு முன்னவரான திருத்தக்கதேவரும் பின்னவர்களுள்ளே "தாக்கணங்கும் ஆண் அவாம்" என்று குமரகுருபரரும் "பெண்ணுக்குப் பெண் மோகங் கொள்ளும்" என்று திரிகூடராசப்பக் கவிராசரும் கூறியவற்றினும் மேலாக ஒரு பெண்ணின் அழகை மேம்படுத்துக் கூறுதல் எத்துணைச் சிறப்புடைய கவிஞருக்கும் இயலாததாமென்றால், அது மிகைபடக்கூறலாகாது. எவரும் இதனை மறுக்க முற்படார்: முற்படுவாருளராயின், அவர், மேற்கூறிய, கருத்தொத்த மூன்று கவிப்பகுதிகளினும் சிறப்பாகப் பெண்ணழகை விசேடிக்கும் கவிப்பகுதியையோ கவியையோ காட்டக் கடவாராவார். இக்கவி அக்கவிப்பகுதிகளின்கருத்தையே அணையாகக்கொண்டு சீதையின் அழகை விதந்து கூறியிருக்கவும், இது, அவைகளினும் சிறந்ததென்றது எவ்வாறென்றால், அவ்வாறு வருமாறு:—

எம் மொழிகளினும் உள்ள, செய்யுள்வடிவமான, எந்த நூலினும் விரிந்த வியாசபாரதம் இதிகாசமேயன்றி இராமாயணம்போலக் காவியமுமன்றுமென்பதை நினைவுகூர்ந்தால், கம்பராமாயணம், உலக மகாகாவியங்களுள் அளவில் ஐயமின்றிப் பெரிதானது; அழகினும் முதன்மையானது என்று பன்மொழிப் பனுவல்கள் பல பயின்ற பண்டிதரால் சீர்தூக்கி ஒப்பு நோக்கி ஆராய்ந்து தெளிந்து செப்பப்பெற்ற, ஒப்புயர்வற்ற, திப்பிய, மாப்பெருங்காப்பியமாம். இத் தகைய மேம்பாடு மிக்க கம்பராமாயணம் ஒருங்கே காவியநயமும் நாடகநயமும் இனி

தமைந்து நனிசிறந்திருத்தலை நன்காராய்ந்த ஆங்கில திராவிட வாணர், கம்பர், இராமனை மும்மூர்த்திகளுள் ஒருவரும் தனித்து ஒவ்வார், மூவரும் ஒன்று சேர்ந்தால் ஒப்பாரென்றதுபோல, அவரை ஆங்கில காவிய மகாகவியாகிய மில்ட்டனும் நாடக மகாகவியாகிய ஷேக்ஸ்பியரும் தனித்தனி நிகர்க்கார், ஒன்றுசேர்ந்து நிகர்வா ரென்பார்.

ஒரு முழு வயிரப்பெருமலை, எங்கும் தனக்குரிய வெள்ளிய தெள்ளிய வியனொளி வீசுதலேயன்றிப் பலபல பாகங்களிலும் மாணிக்கம் மரகதம் நீலம் முதலிய பன்மணிப் பன்னிற இன்னொளிகளும் வீசினாற்போலக், கம்பராமாயணம், எங்கும் காவிய காம்பீரியம் இனிது நிரம்பியிருத்தலல்லாமல், பலபகுதிகளினும் நானாவித நாடக நயம் கலந்து எல்லாவகையினும் சிறந்த இனிமைகள் நிறைந்திருக்கின்றது. காவியத்துக்குரிய சிறப்புக் குறைாமல் நாடகரசம் நனி நிரம்பியிருத்தல் பற்றியே, அதி மதிநுட்பமும் அரும் பெரும் பாண்டித்தியமும் ஒருங்கு நிரம்பிய உத்தம வித்துவான், ரசிகசிகாமணி, வியாக்கியான சக்கரவர்த்தி, 'தனிசுலோகி' என்னும் வான்மீகத் தனிச்சுலோக மாபாடிய நூலாசிரியர் பெரியவாச்சான்பிள்ளை, கம்பராமாயணத்தைப்பற்றிக் கூறநேர்ந்த அமயங்களில் அதனைக் கம்ப காவிய மென்னாது கம்பநாடகமென்பர்.

இவ்வாறாக, மாப்பெருங்காப்பிய மாநாடகம் எனற்குரிய கம்பராமாயணத்தில், சூர்ப்பநகைப்படலம், கம்பர், தம் கவித்திறத்தைச் சிறப்பாகக் காட்டச் செய்த பாகங்களுள் ஒன்று. வான்மீகத்திலிருந்து கம்பர் இந்தப் படலத்துக்கு ஆதாரமாக எடுத்துக்கொண்டதெல்லாம், 'இராவணன் தங்கை இராமனைக் கண்டாள், மோகங் கொண்டாள், மூக்கறுப்புண்டாள்' என்பதே. இதை அடிப்படையாகக்கொண்டு சூர்ப்பநகைப்படலமாகிய நாடகமாளிகை, எல்லா அழகுகளுக்கும் இருப்பிடமாக இனிதமைக்கப்பெற்றிருக்கின்றது.

இந்த நாடகத்தில், சூர்ப்பநகை, "ஆடவர் பெண்மை அவாவு தோளினா" னாய் அளவற்ற அழகுடையானான இராமனைக் கண்டு, மோகத்தில் மூழ்கி, அவன் இசைவுபெறவேண்டிப் பரபரப்புடன் அவனோடு உரையாடுகின்றாள். அந்த அமயத்தில், (ஆந்தைபோன்ற அழகில்பொருள் கிடக்க,) அன்னம்போன்ற அழகுடைப்பொருள்

ஏதேனும் எதிர்ப்பட்டால், பார்த்தும் பாராதவளாய்ப், பார்த்த பார்வையைப் பார்த்தமரத்திரையே மீட்டு இராமன்மாட்டுத் திருப்பிச் செலுத்துவாளாயிருக்கின்றாள். அப்படியிருக்கின்றவள், சீதைவரக் காண்கின்றாள். கண்ட அளவிற் சீதையின் பேரழகைப் பிண்டமாக நோக்கி, இந்தப் பேரழகி இந்தப் பேரழகனுக் கேற்றவளாயிருத்தலால், இவள் இவன் இல்லாளோ, இல்லாளல்லாளேல் இலக்குமியேயோ, அவளும் அல்லாளேல் வேறெவளோ என்று திகைக்கின்றாள். பின்பு, முன் பிண்டமாகப்பார்த்த சீதையின் பேரழகு, "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறென" அவள் நெஞ்சைக் கவர, அந்த அழகை நுணுக்கமாக நோக்குவாளாகின்றாள். ஆகவே, இராமனும் இராமன்மீதுவைத்த காமமும் கருத்தைவிட்டுக் கழன்று நழுவியொழியச் சீதையின் அழகை நெடுநேரம் நெஞ்சழுந்த நோக்கிக், கழிபெரிய களிபெருக, வசமிழந்து, மனமயங்கி, நினைவிறந்து நிற்கின்றாள். சிறிது சென்று நினைவு திரும்ப, இவளைவிட்டு என் "கண் பிற பொருளிற் செல்லா; கருத்தெனின், அஃதே: கண்ட—பெண்பிறந்தேனுக் கென்றால், என்படும் பிறருக்கு!" என்று எண்ணுகின்றாள்.

"பெண்டிரும் ஆண்மை வெஃகிப் பேதுறும்" என்பது முதலிய மேற்கூறிய மூன்று விசேடணங்களாற் சிறப்பிக்கப்பெற்ற பெண்களை மோகிக்கும்பெண்களாக அந்த விசேடணங்களிற் கூறப்பட்ட பெண்கள், பொதுவாகப் பெண்களெனப்பட்டாரேயன்றிச், சிறப்பாகச் சூர்ப்பநகை போல ஒப்புயர்வற்ற அழகுடைய ஆடவர்மீது அவரை அணையப்பெறவில்லையானால் அமுதம் அருந்தினும் ஆவி பிரிந்திடுமென்னும்படியான அளவற்ற ஆசை பூண்ட பெண்களெனப்பட்டிலர்; ஆதலால், சீதையின் அழகைக் கம்பர் இந்த இடத்திற் சிறப்பித்துக்கூறியதுபோலப், பெண்ணழகை எந்தக்கவியும் எந்த இடத்திலும் கூறக் காணவில்லை, கூறியிருப்பதாகக் கேட்கவுமில்லை; இனிமேலும் எவரேனும் கூறக்கூடுமென்று எண்ணவுங்கூடவில்லை.

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

பிழைதிருத்தம்.

சென்ற பங்குனிப்பகுதியில் வெளிவந்த 'ஐந்திரம் என்ற பொருளுரையுள், சில பிழைகள் காணப்படுகின்றன. அவற்றை அடியிற் காட்டியபடி திருத்திக்கொள்க.—உதவிப்பத்திராதிபர்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௧௯௯	16	ஜிஹ்வாமூலியம்	ஜிஹ்வாமூலீயம்
,,	25	உபத்மானிய	உபத்மானீய
,,	,,	பாஸ்மேபதம்	பாஸ்மைபதம்
௨0௨	4	அநுநாஸிகா	அநுநாஸிக:
,,	5	நாஸிகா	நாஸிக:
,,	7	அநுநாஸிகா	அநுநாஸிகா:
௨0௩	5	ச்ருதஸம்ஹாத	ச்ருதிஸம்வாத
		வ்ருதிகோஷ:	வ்ருதிவிஷய:
,,	10	அஜ்ஞாத்	அஜ்ஞாத்
,,	17	காலொZஜ	காலொZஜ
,,	20	ஸாஹித்ய	ஸாஹித்யம்
௨0௪	16	நாஜ்ஞா:	Zநஜா:
௨0௫	26	உதம்நாம்	உதம்
௨0௬	4	ஶிக்ஷாஸ்வாவ்யாவ்யாஸ:	ஶீக்ஷாஸ்வாவ்யாவ்யாஸ:
,,	5	வர்ணா: ஸ்வரா:	வர்ணா: ஸ்வரா:
,,	,,	ஸா:வஜ்ஞா நம்	ஸாவஜ்ஞா நம்
,,	6	ஶிக்ஷாத்யாய:	ஶீக்ஷாத்யாய:
,,	9	நைஷ்டிக	நைஷ்டிக
,,	18	வர்ணா:	வர்ணா:
,,	,,	கத்யக்ஷரா:	கத்யக்ஷரா:
,,	,,	வஷ:	வஷா:
,,	20	ஹஷ:	ஹஷ:
,,	21	ஓட்ய	ஓஷ்ட்ய
௨0௭	21	மகேசுர	மாஹேசுர

ஒரு நாட்டுப்புரத் தேவாலயமுற்றத்தில் எழுதப்பட்ட

இரங்கற்பா.

("ELGY WRITTEN IN A COUNTRY CHURCH YARD").

கிரே (**Grey**) என்னும் ஆங்கிலப்புலவரால் இயற்றப்பட்டது.

[ககக—ம் பக்கத் தொடர்ச்சி.]

31 மருவியமாண்பிலாராய்மாய்ந்தவிச்சிறுபுன்மாந்தர்
கரவறுகாதையீண்டுக்கழறியவுனைக்குறித்தே
பரவுசிந்தனையினோடுதனிமைபாய்ப்படருவாரேல்
விரவுமன்புன்பானுற்றுநுன்னிலைவினவுவாரே.

32 வைகறைமருவுங்காலைப்பனிதனைவிரைவின்மேவுஞ்
செய்கையாரடியானீக்கிச்சிறந்தமேனிலத்தினின்றே
வைகறைக்கதிரைநோக்கமருவுதல்கண்டோமென்றும்
மையறுவானம்பாடிவந்தனக்கவிதைதன்னை.

33 இனிமையினிசைக்குமந்தமாலைபம்பொழுதின்மேவிக்
கனைகதிர்மறையுங்காட்சிநோக்குதல்கண்டோமென்றும்
வினையமோடெமதுவேலைமுடித்துநாம்வீடுநோக்கு
மனையதோர்காலையந்தக்காட்டயற்கண்டோமென்றும்.

34 உச்சியம்போதிலுள்ளத்துறுநினைவில்லானாகிப்
பச்சைவேர்பின்னிச்சூழ்ந்தேபார்ப்பவர்யாருமன்பால்
நச்சிடுநலஞ்சேர்ந்தங்கேயசைமூதுமரத்தின்கீழே
யிச்சையாற்கிடந்தேயாங்கணிசைந்தசிற்றூற்றினோட்டம்.

35 தன்னையேயுற்றுநோக்குந்தகையொடுமேவுங்காலைப்
பன்முறைகண்டோமென்றுப்பழிப்பினானகைத்தல்போல
மன்னுமக்காட்டின்சார்பேமருவுதன்னுளத்திற்கேற்பத்
துன்னுநல்லுரைபிதற்றித்திரிதருமந்தத்தோற்றம்.

36 கண்டனம்யாமேயென்றுங்கருதுமிவ்வேளைதன்னி
லெண்டருகவலையாலேபித்தனாயிசைந்தான்போன்றும்
மண்டியகாதனையால்வாட்டமுற்றவனேபோன்றும்
விண்டதன்சுற்றத்தாரால்விலக்கப்பட்டவனேபோன்றும்.

37 வாடியேவதங்கித்துன்பமருவியேதிரியுங்காலைப்
பீடுறக்கண்டோமென்றும்பேசியேபின்னோர்நாளி
னீடுறுவழக்காறாகநிற்குமக்குன்றிலேனுங்
கூடுபுல்வெளியிலேனுங்குலவுசீர்க்காதலாலே.

38 மருவுமம்மரக்கீழேனுங்கண்டிலேமடுத்தநாளு
மருவியின்பாங்கிலேனுமகன்றகாட்டருகிலேனும்
பொருவிலாமரத்தினூடேபொருந்தியவெளியிலேனும்
வருதலைப்பொருந்தானாகியுற்றனன்மற்றைநாளில்.

39 சாவினுக்குரியதானதகைபெறுமிரங்கற்பாவான்
மேவுறுமொலியினூடும்மிகுதுயர்க்கோலத்தோடுந்
தாவிலாவாலயத்தின்சாலையினூடேமெல்லக்
காவப்பட்டேகுமத்தைக்கண்டனம்யாமேயென்றும்.

40 வாசிக்குந்திறலையுற்றீராதவினீவிர்வந்தே
வாசித்துப்பாருமாங்கம்மரத்தினின்னீழற்கீழே
தேசுக்கோரிலக்கமாகத்திகழுமக்கல்லின்மீது
நேசத்தாலெழுதப்பட்டேநிலைபெறும்பாவையென்றும்.

41 மெய்பெறுமாண்டின்முன்னாய்மேவுறுதிங்கடோறும்
தெய்விகவருளினாலேமலர்மழைசிறந்தேயாங்க
ணெய்திடல்கண்டோமென்றுமெழில்பெறுசெம்மைசான்ற
மையறுகுருவியாங்குக்குரம்பையைமகிழ்வாற்கட்டி.

42 இன்னிசைக்கீதம்பாடியுலவுதல்கண்டோமென்றும்
மன்னுசிற்றடிகளாங்கம்மண்மிசைப்பதிந்தேதோன்ற
றன்னைநாங்கண்டோமென்றுநரைசெறிதலையோனாகித்
துன்னுமோரிடையனன்பாற்சொல்லவுங்கூடுமன்றே.

சமாதிசாசனம்.

1 நலமதற்குநலஞ்செறிதேசுக்கும்
அயலனுமொருவாலிபன்றன்சிர
மியலுமிந்தநற்பூமிமடியிலே
யயர்வுதீர்ந்திளைப்பாறிடுகின்றதே.

2 இங்கிவன்றனெளியபிறப்பிடைப்
பங்கமில்லின்கலைபயன்பட்டில
வெங்கண்வாட்டமிவன்றனைவேண்டியே
தங்குசொந்தந்தனக்கெனக்கொண்டதே.

3 உண்மைசேருநல்லுயிரையுற்றுளோன்
வண்மையாளனுய்த்திகழுமாண்பினன்
கண்ணியஞ்செறிகடவுளும்மிவற்
கெண்ணுமோர்பெரும்பேற்றையீந்தனன்.

4 நீளவொண்கணன்னீரின்றுள்ளியே
யேழையாயினோர்க்கீந்தநற்பொருள்
நாளுநண்பதாயிதனைநச்சியே
வாழியீசன்பால்வாங்கிக்கொண்டனன்.

5 இன்றுமிங்கிவன்றகைமைநாடியே
பன்முறைசொலும்பண்புமில்லையித்
தன்மையோன்குறைதனையச்சந்துறு
மின்னலாரிடத்திருந்திழுக்கலீர்.

6 ஆங்கணேயவன்குணமுங்குற்றமு
மேங்குமெண்ணமோடிசைந்தவாகியே
தாங்குமீசனுந்தந்தையார்மடித்
தூங்குகின்றனசொல்வதென்கொலோ?

முற்றிற்று.

ந. பத்மாவதி.

தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனாபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்
எழுதுவது.

[கஅகூ-ஆம்பக்கத் தொடர்ச்சி]

57-வது சூத்திரம்.

கால முலக முயிரே யுடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூத
ஞாயிறு... ... ...
... ...
பால்பிரிந் திசையா வுயர்திணை மேன.

இச்சூத்திரவுரையில் உலகமென்பது வடசொல்லென்று சேனாவரையர் குறித்துள்ளார். நச்சினார்க்கினியர் 'ஆசிரியர் வடசொற்களை எடுத்தோதி இலக்கணங்கூறாராகலின் அது வடசொல்லன்று' என்று கூறியுள்ளார்; அன்னார் தெய்வம், பூதம் என்றசொற்களையும் தமிழ்ச் சொற்களே யென்று கொண்டார்போலும்.

60-வது சூத்திரம். எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே.

உரைகாரர்கள் மூவரும் இச்சூத்திரம் அருத்தாபத்தியைக் கூறுகின்றது என்றே கூறியுள்ளனர். உரையாசிரியர் 'மேலைச்சேரிக்கோழி அலைத்தது, குடங்கொண்டான் வீழ்ந்தான்' என்று இரண்டு உதாரணங் கொடுத்துள்ளார். இதைச் சேனாவரையர் 'கீழ்ச்சேரிக்கோழியலைப்புண்டலின்றி மேற்சேரிக்கோழியலைத்தலமையாமையானும், குடம்வீழ்தலின்றிக் குடங்கொண்டான்வீழ்தலமையாமையானும், கீழ்ச்சேரிக்கோழியலைப்புண்டலும் குடம்வீழ்தலும் சொல்லானன்றி இன்றியமையாமை* யாகிய பொருளாற்றலாற் பெறப்படுமாகலான் ஈண்டைக்கெய்தா, இது சொல்லாராய்ச்சியாகலான்' என்று மறுத்துள்ளார். கீழ்ச்சேரிக்கோழி யலைப்புண்டலின்றி மேற்சேரிக்கோழி யலைத்த லமையாதா வென்றும்,

* அநந்யதாஸித்தம் என்பதை இன்றியமையாமை என்று மொழிபெயர்த்துள்ளார்.

குடம் கையினின்றுவிழாமலே குடங்கொண்டான்வீழ்தல் அமையாதா வென்றும் ஐயந் தோன்றுகின்றது. மேலும் அவர் கூறியுள்ள 'அறஞ் செய்தான் றுறக்கம் புகும்' என்ற உதாரணத்தில் மறஞ்செய்தான் றுறக்கம் புகான் என்பது பொருளாற்றலால் உணரப்படுகின்றதா? சொல்லாராய்ச்சியால் உணரப்படுகின்றதா? என்பதும் ஆராயத்தக்கது. சேனாவரையர்கூறியுள்ள உதாரணங்கள் இனஞ்சுட்டாமலும் வரலாம்; உரையாசிரியர்கூறியுள்ள உதாரணங்கள் இனஞ்சுட்டித்தான் வரும் என்ற வேறுபாடுமாத்திரம் விளங்குகிறது.

சூத்திரத்தில் 'எடுத்தமொழி' என்பதற்கு 'எடுத்தபொருளை உணர்த்தும் மொழிகள்கொண்ட வாக்கியம் என்று பொருளாகும்.

(கிளவியாக்கம் முற்றிற்று.)

வேற்றுமையியல்.

கிளவியாக்கத்துடன் வேற்றுமையியலுக்குள்ள இயைபு.*

உரையாசிரியர்:—மேலோத்தினுள் நால்வகைப்பட்டசொற்களையும் பொருள்கள்மேலாமாறு கூறிப்போந்தான்; அவற்றுள் முதலது பெயர்ச்சொல்; அதனது இலக்கணம் உணர்த்திய எடுத்துக்கொண்டான்.

சேனாவரையர்:—நான்குசொற்கும் பொதுவிலக்கணமுணர்த்தினார்; அதற்கு இடையீடின்றி அவற்றது சிறப்பிலக்கணமுணர்த்துதன் முறைமையாயினும், வேற்றுமையிலக்கணமுணர்த்துதற்கு வேறிடமின்மையானும், பொதுவிலக்கணமாதலொப்புமையானும், உருபேற்றல் பெயர்க்கிலக்கணமாகலின் வேற்றுமையுணர்த்திப் பெயருணர்த்தன் முறையாகலானும், கிளவியாக்கத்திற்கும் பெயரியற்குமிடை வேற்றுமையிலக்கணமுணர்த்தியவெடுத்துக்கொண்டார்; வேற்றுமையாவன-பெயரும் ஓரிடைச்சொல்லுமாகலின் அவற்றதிலக்கணமும் பொதுவிலக்கணமேயாம்.

நச்சினார்க்கினியர்:—முன்னர் நான்குசொற்கும் பொதுவிலக்கணம் உணர்த்திய அதிகாரத்தானே இப்பொதுவிலக்கணங்கூறுகின்ற ஓத்தினையுஞ் சேரக்கூறினார். அப்பொதுவிலக்கணம் என்னையெனின்?

---

*இயைபு என்பதை 'ஸம்கதி' என்று கூறுவர் வடநூலார்.

வேற்றுமைதாமும் பெயரும் ஒருசார்வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய பொதுவிலக்கணமாதலுடைமையானும், 'எழுவாய்வேற்றுமை பெயர்தோன்றுநிலையே' எனவும், 'ஈறுபெயர்க் காகுமியற்கையவென்ப' எனவும், 'பெயர்நிலைக்கிளவிகாலந்தோன்றா' எனவும், தொழிற்பெயர் காலந்தோன்றுமெனவும் மேற்கூறுஞ் சிறப்புடைப்பெயர்க்குப் பொதுவிலக்கணம் ஈண்டுக்கூறுதலுடைமையானும், இவ்வோத்துப் பொதுவிலக்கணமே கூறியதாயிற்று.

உரையாசிரியர்மதத்தைச் சேனாவரையர் இரண்டுகாரணங்களால் மறுத்துள்ளார்:—(1) இவ்வோத்துப் பெயரிலக்கணநுதலியெடுத்துக் கொள்ளப்பட்டதாயின், உருபேற்றலும், ("கூறிய முறையி னுருபுநிலை திரியா—தீறுபெயர்க் காகு மியற்கைய வென்ப"—தொல். சொல். 69) பயனிலைகோடலும் ("பொருண்மைசுட்டல்...............அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே"—தொல். சொல். 66), காலந்தோன்றாமையும் ("பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா"..........தொல். சொல். 70.) ஆகிய பெயரிலக்கணம் முன்னோதி, இயைபுபடுதலான் வேற்றுமையுணர்த்துங் கருத்தினராயின் அவற்றையும் இன்னவிலக்கணத்தவென உணர்த்திப் பின்னும் எடுத்துக்கொண்ட பெயரிலக்கணமேபற்றியோதிப் பெயரிய லென ஓரோத்தான் முடியற்பாற்றன்றே. (2) 'எல்லாச்சொல்லும்பொருள் குறித்தனவே' (தொல். சொல். 155) என்பது முதலாகிய ஐந்துசூத்திரமும் பெயரிலக்கணமுணர்த்துமோத்தின்முன் (உரையாசிரியர்மதப்படி பெயரிலக்கணமுணர்த்தும் இவ்வோத்தின்முன்) வையாது இடை வைத்தல் பொருந்தாது.

சேனாவரையர்கூறியது பொருந்துமாவென்று ஆராய்வாம்: அவர் கூறுங்காரணங்கள் மூன்று. 'அவற்றில் வேறிடமின்மையால்' என்னுங் காரணத்தைப்பற்றி ஆராயவேண்டிய தவசியமில்லை. கிளவியாக்கத்தில் நான்குசொற்கும் பொதுவிலக்கணமுணர்த்தினர்; இங்கு வேற்றுமையாகிய பெயருக்கும் இடைச்சொல்லுக்கும் பொதுவிலக்கணம் உணர்த்துகின்றார் என்பது இரண்டாவது. உருபேற்றல்பெயர்க்கிலக்கணமாகலின், வேற்றுமையுணர்த்திப் பெயருணர்த்தன் முறையாகும் என்பது மூன்றாவது. கிளவியாக்கத்தில் முதற்பத்துச்சூத்திரங்களிற்பெயருக்கும்வினைக்கும் பொதுவானவிஷயங்களைக் கூறி மற்றச்சூத்திரங்களிற் சிற்சிலசொற்

களைக்கொண்ட வாக்கியம் எவ்வாறிருக்கவேண்டு மென்பதைப் பெரும் பாலும் ஆசிரியர் கூறியுள்ளாரேயொழியத் தனிமையாய் நால்வகைச்சொற் களுக்கும் இலக்கணங்கூறியுள்ளாரா? அவ்வாறு அவர் கூறினதாகக்கருதி, இங்கும் பொதுவிலக்கணமாதல் என்ற ஒப்புமைவேண்டுமென்று 'வேற்றுமையாவன பெயரும் ஓரிடைச்சொல்லுமாகலின் அவற்றதிலக் கணமும் பொதுவிலக்கணமேயாம்' என்று ஏன் சேனாவரையர் இடர்ப் பட்டுக்கூறவேண்டும்? பெயர்வேற்றுமையென்பது பன்மைபற்றியே என்று அவரே பின் கூறியுள்ளார். மூன்றாவது காரணங்கொள்ளின், உரையாசிரி யரை அவர் மறுத்தவாறு, உருபேற்றல் உணர்த்துஞ் சூத்திரம் இவ் வோத்துக்கு முற்சூத்திரமா யிருக்கவேண்டாமா?

நச்சினார்க்கினியர் "அப்பொதுவிலக்கணம் என்னையெனின், வேற்றுமைதாமும் பெயரும் ஒருசார்வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய பொதுவிலக்கணமாதல் உடைமையானும் என்ற விடத்து உரிச்சொல் எவ்வாறு வேற்றுமையாகும் என்பது விளங்க வில்லை. வேற்றுமையானல், அவ்விடத்து அவை பெயரொன்றே கொள்ளவேண்டாமா? மேலும், 'எழுவாய்வேற்றுமை பெயர்தோன்று நிலையே' எனவும், 'அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே' எனவும், 'ஈறுபெயர்க் காகு மியற்கைய வென்ப' எனவும், 'பெயர்நிலைக்கிளவி காலந் தோன்றா' எனவும், தொழிற்பெயர் காலந்தோன்றுமெனவும் மேற் கூறுஞ் சிறப்புடைப்பெயர்க்குப் பொதுவிலக்கணம் ஈண்டுக் கூறுதல் உடைமையானும்" என்று கூறியுள்ளார். இங்குச் சிறப்புடைப்பெயருக் குப் பொதுவிலக்கணம் ஆசிரியர் கூறியுள்ளாரா? அன்றி, வேற்றுமை யுருபு எங்குவருமென்றும், பெயர் எப்போது எழுவாய்வேற்றுமையாவ தென்றும், தொழிற்பெயருக்கும் பின் வேற்றுமையுருப்பு வருமென்றும் விதிகூறியுள்ளாரா? என்பது ஆராயத்தக்கது.

முன்னோத்துக்கும் இவ்வோத்துக்கும் இயைபு பின்வருமாறு கூறலாமோவென்று எனக்குத் தோன்றுகிறது. கிளவியாக்கத்திற் பெரும் பாலும் வாக்கியத்திற் சொற்களின் வழுவற்ற அமைப்பைப் பற்றியே கூறியுள்ளது. இவ்வாறுகூறுவது 11-ஆவதுசூத்திரம்முதல் ஒத்திறுதி வரையிற் பொருந்தலாம். ஆதியில் 10-சூத்திரங்களுக்குப் பொருந்தாதே யெனின், அந்தப் பத்துசூத்திரங்களும் 11-ஆவதுசூத்திரத்துக்கு முக

வுரையே. அவ்வாறே வாக்கியத்தில் பெபரையும் வினையையும் தழுவும் பெயரது அமைப்பு எவ்வாறு என்பதே வேற்றுமையியலுட்கூறப்படுவது. இதுகாரணம்பற்றியே இதற்குப்பின் வேற்றுமைமயங்கியலும், விளிமாபுங் கூறப்பட்டன. வாக்கியத்தின் சொல்லமைதியைப்பற்றிக் கூறின பின், அச்சொல்லின் இலக்கணமும், பாகுபாடும் யாவை என்று தோன்ற, 'எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே' (தொல். சொல். 155) 'பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலும், சொல்லி னாகு மென்ம னார் புலவர்' (தொல் சொல் 156) 'தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலு-மிருபாற் றென்ப பொருண்மை நிலையே' (தொல். சொல். 157) என்ற மூன்று சூத்திரங்களாற் சொல்லிலக்கணமும், 'சொல்லெனப் படுப பெயரே வினையென்—றாயிரண் டென்ப வறிந்திசி னோரே' (தொல். சொல். 158), 'இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு, மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப' என்ற இரண்டுசூத்திரங்களால் அதன் பாகுபாடுங் கூறி, அதற்குப்பின் பெயர், வினை, இடைச்சொல், உரிச்சொல் இவைகளைப்பற்றிக் கூறி, இறுதியில் எஞ்சினவற்றை எச்சவியலில் ஆசிரியர் கூறினர்.

*வேற்றுமை.

வேற்றுமையென்பது பெயர்ப்பொருளைச் செயப்படுபொருண் முதலாயினவாக வேறுபடுத்துணர்த்துவது என்று சேனவரையர் கூறியுள்ளார். அவ்வாறு வேறுபடுத்துணர்த்துவது ஐ, ஒடு, கு, இன் அது, கண் இவை ஆறே. இவை ஆறினையும் 'ஐ ஒடு கு இன் அது கண் ணென்னு—மவ்வா றென்ப வேற்றுமை யுருபே' (தொல் எழுத். புண. 11) என்னுமிடத்து வேற்றுமையுருபென்று ஆசிரியர் கூறி யுள்ளார். ஆகையால், வேற்றுமையுருபு என்பதை வேற்றுமையாகிய உருபு என்றே விரித்தல்வேண்டும். ஆனல், அவ்வவ்வேற்றுமையுருபை யிறுதியிற்கொண்டபெபரை அவ்வவ்வேற்றுமையென்று உபசாரத்தால் உலகில் வழங்குகிறார்கள். இவ்வாறு வேற்றுமையும் வேற்றுமையுருபும் ஒன்றேஎன்று கொள்ளின், எழுத்ததிகாரத்தில் ஆசிரியர் 'அவ்வாறென்ப வேற்றுமையுருபே' என்று கூறி, இங்கு 'வேற்றுமைதாமே யேழென

*வடமொழி விபக்தி என்னுஞ் சொல்லும், தென்மொழி வேற்றுமை என்னுஞ் சொல்லும் ஒருபொருட்கிளவி.

மொழிப' 'விளிகொள்வதன்கண் விளியோடெட்டே' என்று கூறுவது எவ்வாறுபொருந்துமெனின்?- அங்கு அவ்வாறுகூறியதனால் முக்கியமாய் வேற்றுமை யாறென்றும், பெயரும் விளியும் வேற்றுமையென்பது பன்மைபற்றியவழக்கென்றும் தெளிவாய்ப்புலப்படுத்தற்கே என்க.

வேற்றுமையியல்.

உரையாசிரியர் 'இவ்வோத்து என்னபெயர்த்தோவெனின், வேற்றுமை எனப்பட்ட சிலபொருள் உணர்த்தினமையின், வேற்றுமையியல் என்னும் பெயர்த்து' என்று கூறியுள்ளார். இங்குச் 'சிலபொருள்' என்பது பொருந்துமா? இவ்வோத்தில் வேற்றுமையைப்பற்றித்தானே கூறியுள்ளது? பெயரது இலக்கணந்தான் முக்கியமாய்க் கூறியுள்ளது என்று எண்ணி இவ்வாறு உரையாசிரியர் கூறினர்போலும்.

62-வது சூத்திரம். வேற்றுமை தாமே யேழென மொழிப.

இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் இம்மூவரும் ஒரேவிதமாகப் பொருள்கொண்டனர்.

சேனாவரையர் 'செயப்படுபொருண்முதலாயினவற்றின் வேறுபடுத்துப் பொருண்மாத்திரமுணர்த்தலின்' என்று எழுவாய் வேற்றுமையானதற்குக் காரணம் முன்கூறி, 'அல்லதூஉம், வேற்றுமையென்பது பன்மை பற்றியவழக்கெனினும் அமையும்' என்று பின்கூறியுள்ளார். எழுவாய் வேற்றுமைப் பெயர்ப்பொருளை ஐ முதலிய வேற்றுமைகள் செயப்படு பொருள் முதலியவாக மாற்றுவதால், அவற்றுக்கு வேற்றுமை என்பது பொருந்துமேயொழியச் செயப்படுபொருண் முதலாயினவற்றின் வேறுபடுத்துப் பொருண்மாத்திரமுணர்த்தலின் எழுவாய்வேற்றுமையாயிற்று என்பது அன்னியோன்னியாச்சிரயம் (அந்யோந்யாச்ரயம்) என்னுங் குற்றத்துக்கு இடந்தருமென்றுகருதிப் 'பன்மைபற்றியவழக்கு' என்று கூறினார்போலும்.

63-வது சூத்திரம். விளிகோள் வதன்கண் விளியோ டெட்டே.

இளம்பூரணத்தில் விளித்தல் என்பது கூறுதல் என்றுளது. 'கூறுதல்' என்பதற்குப் பிரதியாகக் 'கூவுதல்' என்றிருக்கவேண்டும்.

65-வது அவற்றுள்,
சூத்திரம். எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே.

இச்சூத்திரத்தின்பொருள்:—

உரையாசிரியர்:-எழுவாய்வேற்றுமைப்பெயர்—முதல்வேற்றுமைப் பெயர். தோன்றுநிலை என்றதனால், மேற்சூத்திரத்துக் கூறப்படும் அறு

வகைப்பயனிலையும் தோன்றநிற்கும் பெயர் எழுவாய்வேற்றுமையாவது என்றவாறும்.

சேனாவரையர்:—மேற்சொல்லப்பட்ட வேற்றுமையுள், முதற்கட் பெயரென்றுகூறப்பட்ட வேற்றுமையாவது—பெயர்தோன்றியதுணையாய் நிற்குநிலைமையாம்.

நச்சினார்க்கினியர்:—மேற்கூறிய வேற்றுமை எட்டனுள் முதல் வேற்றுமையாவது பெயர். பொருள் அறுவகைப்பட்ட பயனிலையுந் தன் கட்டோன்றநிற்கும் நிலைமை.

உரையாசிரியர்கூறியுள்ளபொருளில் எழுவாய்வேற்றுமைப்பெயர் என்பதும், தோன்றுநிலை என்பதன்பொருளும் பொருத்தமாயுளவா வென்று ஆராயத்தக்கன. எழுவாய்வேற்றுமைப்பெயர் என்பதற்குப் பிரதியாக எழுவாய்வேற்றுமை என்றிருந்தால் மூற் சூத்திரத்தில் முதலில் வேற்றுமையாகக்கூறப்பட்ட பெயர் எழுவாய் வேற்றுமை என்பது அவர் கருத்து என்னலாம். இங்கு எழுவாய் வேற்றுமைதான் விதேயமே யொழிய எழுவாய்வேற்றுமைப்பெயர் விதேயமன்று. மேலும், தோன்றுநிலை என்பதற்கு அவர்கூறுவது பொரு ளாயின், அதன்பொருள் பின்னர்ச்சூத்திரத்தில் அடங்கியிருத்தலால், அச்சொல்லே வேண்டாம்.

சேனாவரையர்கூறியுள்ளபொருளின்படி பெயர்தோன்றுநிலையே என் பது விதேயமாகத்தோன்றுகிறது. அவ்வாறாயின் எழுவாய்வேற்றுமை என்பதே உத்தேசியமாகவேண்டும். ஆனால் முன்னர்ச்சூத்திரங்களில் அதைப்பற்றிக்கூறாததால் உத்தேசியமாதற்கு அது தகுதியுள்ளதன்று.

தோன்றுநிலை என்பதற்கு 'உருபும் விளியு மேலாது பிறிதொன்ற னோடு தொகாதுநிற்கும்நிலைமை' என்ற பொருளை மேற்கொண்டு, அதனைப் பெயருக்கு அடைமொழியாக்கித், தான் உருபும், விளியு மேலாது பிறிதொன்றனோடுதொகாதுநின்றநிலைமைகொண்ட (முற்சூத் திரத்தில் எண்ணப்பட்ட) பெயர் எழுவாய்வேற்றுமையே என்று சூத் திரத்துக்குப் பொருள்கொள்ளவேண்டுமென்பது, பெறப்படும்: இவ் வாறே அச் சேனாவரையர்க்குக் கருத்தென்பது 66-ம் சூத்திரவுரையி லுள்ள 'பெயர்தோன்றியதுணையாய்நின்று பயனிலைத்தாதல் எழுவாய்

வேற்றுமையதிலக்கணமென்பது பெற்றும்' என்னும் வாக்கியத்தால் தெளிவாக அறியப்படுகிறது.

நச்சினார்க்கினியர் தோன்றுநிலை என்பதன் பொருள்கூறுமிடத்து உரையாசிரியர்மதத்தை மேற்கொண்டும், அதனை விதேயமாகக்கொள்ளு மிடத்துச் சேனாவரையர்மதத்தை மேற்கொண்டும் உரைகூறியுள்ளார். இதில், இரண்டு விதேயம் வருவதால், வாக்கியபேதமென்ற குற்றமும் வரும்.

இளம்பூரணத்தில் 'ஆயன் சாத்தன் வந்தான் என்புழி ஆயன் என்பதூஉம் பெயர், சாத்தன் என்பதூஉம் பெயர், ஆயினும், இரண் டிற்கும் இரண்டு பயனிலை தோன்றநில்லாமையாற் சாத்தன் என்பதூஉம் வந்தான் என்பதூஉம் ஆயன் என்பதற்கே பயனிலை; அதனால், சாத்தன் என்பது ஆண்டு எழுவாய்வேற்றுமையாயிற்று' என்றுளது. இவ்வாக்கியம் நன்கு அந்நுவயிக்கவில்லை. 'அதனால், சாத்தன் என் பது' என்னுமிடத்து, சாத்தன் என்பதற்குப் பிரதியாக 'ஆயன்' என்றிருப்பின், பொருந்தும். மேலும் 'ஆயன் சாத்தன் வந்தான்' என்ற தொடரிற் சாத்தன் என்பது எவ்வாறு பயனிலையாகும்? 'ஆயன் யார்?' என்று ஒருவன் வினவ 'ஆயன் சாத்தன்' என்று விடையளிக் குமிடத்துச் சாத்தன் பயனிலையாகலாம் 'ஆயன்சாத்தன் வந்தான்' என்னுமிடத்து வந்தான் என்பதுமாத்திரமே பயனிலையாகும்.

இளம்பூரணப்பதிப்பில் 'முதல்வேற்றுமைப்பெயர் என்றவாறு' என்பதற்குப்பின் தனிப்பாராவில் 'இனித் தோன்றுநிலை என்றதனால் என்று தொடங்கியுளது. அஃது அவ்வாறு பிரிக்கப்படாமற் சேர்ந்தே யிருப்பின் நலம்.

நச்சினார்க்கினியத்தில் அவ்வினைமுதலாகிய எழுவாயை மூற்கூறி னார் என்றுளது. இங்கு வினைமுதலும் எழுவாயும் ஒருபொருட் கிளவி. வினைமுதல் என்பது கருத்தா: அது முதல்வேற்றுமையில் வரும்போது எழுவாயாகும்; இராமனால் இராவணன் அடிக்கப்பட்டான் என்னுமிடத்திற்போல மூன்றாம்வேற்றுமையில்வந்தால் எழுவாயாகாது என்பது நுண்ணிதி னுணரத்தக்கது.

[தொடரும்]

இராமநாதபுரம் மஹாராஜா மாட்சிமைதங்கிய

B. இராஜராஜேஸ்வர முத்துராமலிங்க ஸேதுபதியவர்கள்.

அநுதாபக் குறிப்பு.

நம் தமிழ்ச்சங்கத்தின் சாசுவத அக்கிராசனரும் செந்தமிழ்ச்செல்வச் சேதுவேந்தர்பெருமானுமான ஹிஸ் ஹைனஸ் ராஜா ஸேதுபதி ஸ்ரீமத் ஹிரண்யகெர்ப்ப யாஜி ரவிகுல முத்துவிஜய ரெகுநாத ராஜா மஹாராஜராஜஸ்ரீ ராஜராஜேச்வர முத்துராமலிங்க ஸேதுபதி மன்னரவர்கள் சிலமாதங்களாகச் சரீரசௌக்யமில்லாதிருந்து நாளிது விபவ ௵ ஆடி ௴ ௧௨ இரவு இவ்வுலகவாழ்க்கையைத் துறந்தனரென்னும்செய்தி தமிழ்நாடனைத்தையும் துயர்க்கடலில் மூழ்குவித்தது. இவர், புலவர்க்கு வரையாதுவழங்கும் பெருவள்ளலும் இத்தமிழ்ச்சங்கஸ்தாபனத்துக்கு முக்கிய காரணபூதருமாகிய ராஜா M பாஸ்கரஸேதுபதிமன்னரவர்கட்குப்புதல்வராய் 1889-ம் ௵ ஜூன் ௴ 3௳ பிறந்தார். 1910-ம் ௵ ஜூன் ௴ 3௳ ஸேதுராஜ்யாபிஷேகம் செய்துகொண்டு முடிசூடினர். தமிழிலும் ஆங்கிலத்திலும் மிக்கபுலமையும், பல பெருங்கழகங்களிலும் அவையத்தார் வியந்து பாராட்டுமாறு பேசும் சொல்வன்மையும், தமிழில் அஷ்டநாகபந்தம் முதலிய சித்திரகவிகளையும் கவிஞானவரும் புகழும்படி விரைந்துபாடும் திறமும் உடையவர். 1915-ம் ௵ முதல் மரணமடையும்வரை சென்னைச் சட்டசபையில் தமிழ்நாட்டு நிலச்சுவான்தார்களின் பிரதிநிதியாகவும், இராமநாதபுரம் ஜில்லா சங்கத்தில் தொடர்ந்து பலவருஷங்கள் அக்கிராசனராகவும் இருந்து பொதுநன்மையான பல அரிய காரியங்களைச்செய்து எல்லோராலும் நன்குமதிக்கப்பெற்றவர். தம் நாட்டு மக்கள் ஆங்கிலப்பயிற்சி பெறுமாறு இராமநாதபுரத்தில் ஒருபர்தரக்கலாசாலையை நடத்திவந்தவர். ஜெர்மானிய யுத்தகாலத்தில் நம் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குதவியாக இராமநாத் என்ற ஆகாயவிமானமும் ஆசுபத்திரிநிதிக்கு மிக்க பொருளும் அளித்தவர். இச்சங்கத்தின் கட்டடநிதிக்காக ஒரே சமயத்தில் மொத்தமாக ரூபா பதினாயிரம் நன்கொடையளித்திருப்பதுடன் 1914-ம் ௵ சங்கத்தின் பதின்மூன்றாம் வருஷோத்ஸவத்தை இராமநாதபுரத்தில் மிகச் சிறப்பாக நடத்திவைத்தவர். தமிழ்ச் சர்வகலாசங்க ஸ்தாபனவிஷயமாய் ஆலோசனைசொல்லும்பொருட்டு நியமிக்கப்பட்ட கழகத்துக்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பெற்றவர். இன்னும் பல தர்மஸ்தாபனங்களிலும் கழகங்களிலும் தலைவராகவும் உறுப்பினராகவும் இருந்து பலநன்மைகள் செய்தவர். இத்தகைய இவரைப் பிரிந்து வருந்தும் இவர் சுற்றத்தார்க்கெல்லாம் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.